
# சர்வ சமயச் சிந்தனைகள்



புலவர் த. கோவேந்தன்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சர்வ சமயச் சிந்தனைகள்

புலவர் த. கோவேந்தன்

பாவை பப்ளிகேஷன்ஸ்
142, ஜானி ஜான் கான் ரோடு
இராயப்பேட்டை, சென்னை-600 014.

**SARVA SAMAYA CHINDHANAIGAL**
**BY PULAVAR THA. KOVENDHAN**

சர்வ சமயச் சிந்தனைகள்
புலவர். த. கோவேந்தன்

பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு
பதிப்பு : ஜுன், 2000

© பதிப்பகத்தாருக்கு

Code No : P 0025
ISBN : 81- 7735 - 021- 8

**விலை : ரு. 25.00**

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி)லிட்.
142, ஜானி ஜான் கான் ரோடு
ராயப்பேட்டை
சென்னை - 600 014.
தொ.பே.எண்.8532441, 8532973

## பதிப்புரை

உலகத்தில் எந்த ஒரு சமயமும் ஒத்துப் போவதில்லை. அங்கும் இங்கும் முரண்பாடுகள் இருந்து தான் வருகின்றன. ஆனால் சமயத்தை எண்ணாத சமுதாயச் சீர்திருத்த முன்னோடிகள் ஒரே உண்மையை வெவ்வேறு மொழிகளில், வெவ்வேறு பாங்கில் கூறினார்கள்.

தலைக்காவேரியும் கங்கையின் மூல ஊற்றும் தோன்றிய இடத்திலிருந்து பல்வேறு வழிகளில் பலவேறு நிலங்களில் பாய்ந்து இறுதியில் ஒரே கடலில் கூடுகின்றன அல்லது ஒன்றுகின்றன. அதைப் போலவே உலகில் எக்காலத்தில் எம்மொழியில் மூல முதல்வர்கள் தோன்றினாலும் அவர்களின் அறநோக்கம் ஒன்றே பொருள் நோக்கம் ஒன்றே இன்ப நோக்கமும் ஒன்றே. நாட்டுக்கு நாடு பசுவின் இனங்கள் வேறுபட்டாலும் பாலின் பண்பும் பயனும் ஒன்றாதல் போல 'சர்வ சமயச் சிந்தனைகள்' பெயரில் வேறுபட்டாலும் இரண்டு தண்டவாளங்களைப் போல இணையாமல் நீண்டாலும் மானுட வாழ்க்கை என்ற தொடர் வண்டி எவ்வெவர் எவ்வெவ் ஊர்க்குச் செல்லவேண்டுமோ அவ்வவ் ஊரில் இறக்கிவிட்டு - இறுதியான ஊர்க்கும்

சென்று அனைவரையும் ஓரிடத்தில் இறக்கி விடுகிறது.

அவ்வாறே பேருண்மைகள் அனைத்தும் "ஒன்று பரம் பொருள்; நாம் அதன் மக்கள் - உலகம் இன்பக் கேணி" என்றுணர்த்துகின்றன. அரிய 'சர்வசமய சிந்தனைகளை' திரட்டித் தந்த புலவர் த. கேவேந்தன் டி.லிட் அவர்கட்கு எங்கள் நன்றி. மக்கள் பயன் கொள்க.

பதிப்பகத்தார்

# முன்னோட்டம்

எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தச் சமுதாயம் கெடுகின்றனவோ அந்தத்தந்தக் காலத்தில் அவ்வச் சமுதாயத்தின் கேட்டினை நீக்கி மக்களை நல்வழிப்படுத்தச் சான்றோர்கள் தோன்றுகின்றனர். அவரவர் தம் கொள்கைகளைக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றவர்கள் அவரவர் முன்னோடிகளின் பெயரால் சமயத்தைப் படைத்தனர்.

நன்மைக்குத் தோற்றுவித்தவை தீமையின் உச்சநிலைக்குச் சென்று பகையுணர்ச்சியால் மக்களை மதவெறியர்கள் ஆக்கின. அறிவியலும் அறவுணர்வும் வளர வளர 'மதம் மக்களை மாய்க்கும் அபின்' நிலை மாறி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒவ்வொரு சமயமும் ஒரு வாழ்வியக்க நெறி என்று ஓரளவு உணரப்பட்டது. உணர்த்தவும் பட்டது.

இந் நல்லுணர்வுக்கு இருபதாம் நூற்றாண்டுப் பேரறிஞர்கள் பாடுபட்டனர். அதன் விளைவுதான் மதநல்லிணக்கம். உறுதியான உள்ளம் இருந்தால் எவ்வளவு உறுதியற்ற -ஐயத்திற்கிடமான செய்திகள் கூறப்பட்டாலும் அதிலிருந்து உண்மையை - உறுதியை எடுத்துக் கொள்ளும் நமது உள் மனத்தின் நிலைக்கு ஏற்ற செய்தியையே நாம் எடுத்துக் கொள்கிறோம். எதுவும் நம்மீது திணிக்கப்படுவதில்லை. நம் வாழ்வு ஓங்க நமது மனத்துடன் இணையும் ஏற்றமிகு கருத்துகளையே நாம் நமக்குள் வரவேற்று ஏற்றுக் கொள்கிறோம். அவ்வகையில் தொகுக்கப்பட்டதே 'சர்வ சமயச் சிந்தனைகள்'

# முன்னுரை

மனிதன் கைகளால் உழைத்து உழைத்து ஆறாம் அறிவை வளர்த்துக் கொண்டான். ஐம்புலன்களின் கூட்டுணர்ச்சியே மனம். மனம் நொடிக்கு நொடி; மணிக்கு மணி; நாளுக்கு நாள் கால வளர்ச்சியின் ஒவ்வொரு கணமும் வளர்ந்து, செழித்து உயர்ந்து கொண்டே இருப்பது. அச் செயல்தான் சிந்தனை. அச் சிந்தனை மானுட இனத்திற்கு மட்டுமே உள்ளுயிரின் வற்றாத ஊற்றாக இருப்பது.

உலகில் எந்த ஓர் உயிர்க்கும் கிடைக்காத சிந்தனைப் பேறு மானுடத்திற்கு கிடைத்ததால் வாழ்வின் குறிக்கோளை மானுடரில் ஒரு சிலரே சிந்திக்க முடிந்தது. அச் சிந்தனை மனித வாழ்வைப் பண்படுத்த - சமைக்க முன்னோட்டமானது. சமூக வாழ்வின் முன்னோடிகளின் கருத்துகளே பின்னர் முன்னோடிகளின் பெயரால் சமயம் ஆயின. அதாவது மனித வாழ்வைப் பண்படுத்தின.

காலம் செல்லச் செல்ல சமயம் (பண்பாடு) மதமாக மாறி மக்களை வேறுபடுத்தியும் கூறுபடுத்தியும் அலைகழித்தது. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சிந்தனையாளர் தோன்றினர். கிரேக்கத்தில் சாக்ரட்டீஸ், சீனத்தில் கன்பூஷியஸ், இந்தியாவில் புத்தர், ஜெருசலத்தில் ஏசு கிருஸ்த்து, அரேபியாவில் முகமது நபி, பெர்சியாவில் ஜொராதிரஸ்டர், பஞ்சாபில் குருனாநக் எனப் பல சிந்தனையாளர்கள் உலகெங்கிலும் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டினர்.

மேலே குறிப்பிட்ட முதல் இருவருக்கும் நல்ல கற்றறிந்த மாணாக்கர்கள் இருந்தபோதும் அவர்களின் பெயர்களால் சமயத்தை உண்டாக்கவில்லை. ஆனால் மற்றவர்களின் பெயரால் அவர்தம் தொண்டர்கள், அடியார்கள் சமயத்தை உண்டாக்கினார்கள். சமயமும் மதமும் ஒன்றல்ல. மதம் என்பது முதலில் கொள்கையைக் குறித்தது. பின்னர் ஒரு சில வெறியர்களால் பொருளை இழந்து மக்களை வீழ்த்தும் மத யானையாக மாறிற்று.

உண்மையான சமய உணர்வு மக்கள் முன்னேற்றத்திற்கும் மகிழ்ச்சிக்கும் இன்பத்திற்கும் ஒழுக்கததிற்கும் இன்றியமையாத தேவையாயிற்று. அச் சமயத்திற்குரிய தனிச் சிறப்பான இயல்புகள் அன்பு, இரக்கம், வாய்மை, தூய்மை, நல்லெண்ணம், மேலான உணர்வு ஆகியவை உள்ளுயிர்க்குதவும் வெறும் நம்பிக்கையாய் மட்டுமல்லாமல் நன்னடத்தைக்கு வழிகாட்டியாய் அமைந்து மானுட சமூகத்தை நல்வழிப்படுத்துகின்றன.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த சமய வாணர்களின் சால்புரைகளை அகர வரிசைப்படுத்தி நூலாகத் தொகுத்துத் தந்துள்ளோம். செங்கதிரும் வெண்கதிரும் மண்ணுலகில் ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறு பெயர் பெற்றிருப்பதைப் போலப் பல்வேறு சமயங்களும் ஒரே உண்மையைத்தான் உரைக்கின்றன. முன்னோர்கள் கூறியதுபோல ஆறுகள் பலவாயினும் சேருமிடம் கடலில் ஒன்றுதான். கடலில் மூழ்கி முத்தெடுத்துச் சிந்தனைக் களியுங்கள்.

**த.கோவேந்தன்**
29.2.2000

# சர்வ சமயச் சிந்தனைகள்

## சிந்தனை மணிகள்

1. அகிம்சை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 17
2. அச்சம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 17
3. அஞ்சாமை . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18
4. அடக்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18
5. அருகன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18
6. அருள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 19
7. அருள் வாக்கு . . . . . . . . . . . . . . . . . . . . 20
8. அவா . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 20
9. அழகு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 22
10. அழுக்காறு . . . . . . . . . . . . . . . . . . . . . 22
11. அற்புதங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . 22
12. அறந்தவறியவர் . . . . . . . . . . . . . . . . . . 22
13. அறநெறி . . . . . . . . . . . . . . . . . . . . . . . 22
14. அறம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 23
15. அறிஞர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 30
16. அறிவு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 30
17. அன்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 32
18. ஆசை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 37
19. ஆணவம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 38
20. ஆன்மா . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 39
21. ஆற்றல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 39

22. இம்சை ........................ 39
23. இரக்கம் ........................ 40
24. இலட்சியம் ........................ 40
25. இன்பம் ........................ 40
26. ஈகை ........................ 46
27. உடம்பு ........................ 47
28. உடல் ........................ 48
29. உண்மை ........................ 48
30. உலகம் ........................ 50
31. எளிய வாழ்க்கை ........................ 50
32. ஏழைகள் ........................ 50
33. ஒழுக்கம் ........................ 51
34. கடமை ........................ 51
35. கடவுள் ........................ 52
36. கடவுள் அருள் ........................ 56
37. கடவுள் இராச்சியம் ........................ 56
38. கடவுள் உறைவிடம் ........................ 56
39. ,, கற்பனைகள் ........................ 60
40. ,, காணல் ........................ 60
41. ,, தரிசனம் ........................ 64
42. ,, நம்பிக்கை ........................ 65
43. ,, நாமம் ........................ 66
44. ,, துதி ........................ 66
45. ,, வழிபாடு ........................ 67
46. கருணை ........................ 67
47. கல்வி ........................ 67

48. கவலை ........ 68
49. கழிவிரக்கம் ........ 68
50. கிறிஸ்த்து ........ 69
51. குரு ........ 69
52. கொல்லாமை ........ 69
53. கோபம் ........ 70
54. கோயில் ........ 70
55. சகோத்ரர் ........ 70
56. சடங்குகள் ........ 70
57. சாத்தான் ........ 71
58. சாதனம் ........ 71
59. சாந்தி ........ 71
60. சால்பு ........ 71
61. சான்றோர் ........ 72
62. சான்றோன் ........ 78
63. சிந்தனை ........ 78
64. சிறப்பு ........ 78
65. சினம் ........ 78
66. சுதந்திரம் ........ 79
67. சுய உதவி ........ 79
68. ,, நலம் ........ 79
69. செயல் ........ 79
70. செருக்கு ........ 80
71. செல்வம் ........ 80
72. சொர்க்கம் ........ 81
73. தந்தை ........ 82

74. தவறு ........................ 82
75. த்வம் ........................ 82
76. தன்னலம் ........................ 83
77. தன்னலமின்மை ........................ 83
78. தாவோ ........................ 84
79. தியானம் ........................ 84
80. திருப்தி ........................ 84
81. தீமை ........................ 84
82. தீமை செய்தல் ........................ 84
83. தீமைக்கு நன்மை ........................ 85
84. தீயொழுக்கம் ........................ 85
85. துக்கம் ........................ 85
86. துறவு ........................ 85
87. துன்பம் ........................ 86
88. தூய்மை ........................ 89
89. நட்பு ........................ 91
90. நண்பன் ........................ 92
91. நபி நாயகம் ........................ 92
92. நம்பிக்கை ........................ 93
93. நல்ல குணம் ........................ 93
94. நன்மை ........................ 93
95. நன்மை செய்தல் ........................ 95
96. நன்றி அறிதல் ........................ 95
97. நாடு ........................ 95
98. நாணம் ........................ 95
99. நாவடக்கம் ........................ 95
100. நெஞ்சுக்கு ........................ 96
101. பக்தன் ........................ 98
102. பக்தர் ........................ 99
103. பக்தி ........................ 100

104. பகைமை .......... 100
105. பட்டங்கள் .......... 102
106. படிற்றொழுக்கம் .......... 102
107. பண்பாடு .......... 102
108. பணிவுடைமை .......... 102
109. பாவம் .......... 103
110. பிறர் தீமை .......... 103
111. புகழ் .......... 103
112. புத்தர் .......... 103
113. பூசை .......... 104
114. பெண் .......... 105
115. பெற்றோர் .......... 105
116. பேறு .......... 105
117. பொறுமை .......... 106
118. மதப்பற்று .......... 107
119. மதப் பொறுமை .......... 107
120. மதம் .......... 108
121. மரணம் .......... 108
122. மன்னித்தல் .......... 111
123. மனச்சான்று .......... 111
124. மனம் .......... 111
125. மனிதன் .......... 112
126. மறம் .......... 114
127. முக்தி .......... 114
128. முஸ்லீம் .......... 115
129. மூதாதையர் .......... 115
130. மௌனம் .......... 116
131. யாம் இருப்பவை .......... 116

132. யோகம் ........................ 118
133. வணக்கம் ........................ 118
134. வழிபாடு ........................ 118
135. வறுமை ........................ 122
136. வாய்மை ........................ 122
137. வாழ்வு ........................ 124
138. விமோசனம் ........................ 124
139. வீரன் ........................ 124
140. வெற்றி ........................ 124
141. வேண்டுதல் ........................ 125
142. வேதம் ........................ 127
143. வேதாந்தம் ........................ 127

# சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| சமணம் | - ச |
| கன்பூசியஸ் | - க |
| கிருத்துவம் | - கி |
| தாவோ | - தா |
| இஸ்லாம் | - இ |
| வேதம் | - வேத |
| பௌத்தம் | - பௌ |
| எபிரேயம் | - எ |
| ஜாரதிரஸ்டம் | - ஜா |
| சிந்தாமணி | - சி |
| சீக்கியம் | - சீ |
| மனுதர்மம் | - ம |
| தேவாரம் | - தே |

# சர்வ சமயச் சிந்தனைகள்

## அகிம்சை

☆ எல்லாப் பிராணிகளும் துன்பத்தை வெறுக்கின்றன, அதனால் எதையும் கொல்லலாகாது. கொல்லாமையே அறிவின் தெளிந்த சாரமாகும் ச

☆ ஆசையின்மையே அகிம்சை, ஆசையுடைமையே கிம்சை, இதுவே சமண மதத்தின் சாரம். ச

☆ பிறரைக் கொல்லும் பிராணிகளையும் கொல்லற்க. ச

☆ கொல்லலாம் என்று கூறுபவரினும் மத நம்பிக்கையில்லாதவர் சாலச் சிறந்தவர். ச

## அச்சம்

☆ நான் ஒரு மனிதன், நான் ஏன் மனிதர்களைக் கண்டு அஞ்சவேண்டும்? க

☆ அச்சத்துடனும் பொய்யுடனும் வாழ்தல் மரணத்தினும் தீயதாகும். க

☆ இறைவன் என்னுடன் இருக்கும்போது எனக்கு அச்சம் ஏது? கி

☆ அன்புள்ள இடத்தில் அச்சமில்லை, தூய அன்பு அச்சத்தைத் துரத்திவிட வல்லது. கி

☆ இதயத்தில் தூய்மை உடையவனிடம் எள்ளளவு அச்சமும் நிற்கமாட்டாது. கடவுள் நாமத்தில் நம்பிக்கையுடையவனே அச்சமில்லாதவன். கி

☆ அச்சமற்ற கடவுளைத் தியானிப்பவரிடமிருந்து அச்சம் அனைத்தும் அகன்றுவிடும். கி

☆ அச்சமுள்ள இடத்தில் ஆண்டவன் இருக்கமாட்டான், ஆண்டவன் உள்ளயிடத்தில் அச்சம் உண்டாகாது. கி

## அஞ்சாமை

☆ நான் கருணை உடையேன், அதனால் நான் அஞ்சாதிருக்க வல்லேன். தா

## அடக்கம்

☆ அடக்கம் என்னும் முளையிலிருந்தே ஆற்றல் என்னும் மரம் வளரும், உயரமான கோபுரத்துக்கு ஆழமான அடிநிலை அமைப்பர். தா

☆ அடக்க முடையவன் கேடு அடையான், வளைபவன் நிமிர்வான், இல்லாதவன் பெறுவான்.

## அருகன்

☆ மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்தத்
தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வன் என்ப
தேவாதி தேவன் அவன்சேவடி சேர்து மன்றே.
- சிந்தாமணி

☆ உலக மூன்றும் ஒருங்குட னேத்துமாண்
திலக மாய திறலறிவன் அடி
வழுவி னெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக வென்றியான்
- வளையாபதி

☆ பிறப்பென்னும் பிணிநீங்கப் பிரிவரிய வினைக்கடலை
அறப்புணையே புணையாக மறுகரைபோய்க்
கரையேறி
இறப்பிலநின் அருள் புரிந்தாங்கு எமக்கெல்லா
மருளினையாய்
மறவாளி ஒளிமழுங்க மனையவர்க்கும்
முனையவர்க்கும்
அறவாழி வலனுயரி அருள்நெறியே அருளியோய்.

☆ அருளுடை ஒருவ! நின் அடியிணை பரவுதும்,
இருளுடை நாற்கதி இடர்முழு தகலப்
பாடுதற் குரிய பல்புகழ்
வீடுபே றுலகம் கூடுக எனவே. ச

## அருள்

☆ தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால், தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

☆ கண்ணோட்ட மென்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு. - வள்ளுவர்

☆ அருளால் எவையும் பார் என்றான் - அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்,
இருளான பொருள் கண்ட தல்லாற் - கண்ட
என்னையுங் கண்டிலேன் என்னேடி தோழி

- தாயுமானவர்

☆ ஆருயிர் யாதொன்று இடருறும் ஆங்கதற்கு
ஒருயிர் போல உருகி உயக் கொள்மின்
நேரின் அதுமுடியாதெனில் நெஞ்சகத்து
ஈர முடைமை அருளின் இயல்பே.

- சூளாமணி (ச)

☆ தன்னொக்கும் தெய்வம் பிறிதில்லைத் தான் தன்னைப்
பின்னை மனமறப் பெற்றானேல் - என்னை
இருட்கண்ணே நோக்காது இருமையும் பெற்றாங்கு
அருட்கண்ணே நிற்பது அறிவு.

- அறநெறிச்சாரம் (ச)

☆ அறிவிய மனத்தராகி ஆருயிர்க்கு அருளைச் செய்யில்
பறவையும் நிழலும் போலப் பழவினை உயிரொடு
ஒட்டா,

- திருத்தக்கதேவர் (ச)

## அருள் வாக்கு

☆ என்னுடைய சகோதரர்களில் மிகத் தாழ்ந்தவர்க்குச் செய்த உதவியும் எனக்குச் செய்ததே — கி

☆ என் பின்வர விரும்புவோர் தன்னை அறவே நீக்கிவிட்டு, நாடோறும் தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்பின் வரக்கடவர் — கி

☆ நானே உலகத்தின் ஒளி, என்பின் வருவோர் இருளில் நடவார், வாழ்வாகிய ஒளியைப் பெறுவார். — கி

☆ என்னை நேசித்தவன் என் சொற்படி நடப்பான், என் தந்தை அவனை நேசிப்பார் — கி

☆ நான் சேவை செய்வதற்க்காகவே வந்தேன், சேவை பெறுவதற்காகவன்று. — கி

## அவா

☆ ஒடுங்கு.நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை, நமனும் அங்கில்லை,
இடும்பையும் இல்லை, இராப் பகலில்லை,
படும்பய னில்லை பற்றுவிட்டோர்க்கே,

☆ அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவு அறிந் தேனே. - திருமூலா

☆ மெய்யுளே விளக்கை ஏற்றி
வேண்டளே வுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி
உகக்கின்றேன், உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர்
அவர்களே வலியர் சாலச்
செய்வதொன்று அறிய மாட்டேன்
திருப்புக லூர னீரே.

புள்ளுவர் ஐவர் கள்வா
  புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறைக் கொள்வர்
  தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை
  முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங்கு
  உணர்வினால் எய்ய லாமே. - திருநாவுக்கரசர்

☆ அற்றது பற்றெனில்
உற்றது வீடு, உயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே. - நம்மாழ்வார்

☆ பல்லுயிர்த் தொகுதியும் பவக்கடலழுந்த
அல்லல் செய்யு மவாவெனப் படுமவ்
வறுமையி னின்றும் வாங்கி
அறிவின் செல்வ மனித்தரு ளெனக்கே
செல்வ மென்பது சிந்தையி னிறைவே;
அல்கா நல்குர வவாவெனப்படுமே
ஐயுணர் வடக்கிய மெய்யுணர் வல்லதை
உவாக்கடல் சிறுக உலகெலாம் விழுங்கும்.
- குமரகுருபரர்

☆ அவாவில்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவா அது மேன்மேல் வரும்.

அவாவென்ப எல்லா உயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவா அப் பிறப்பீனும் வித்து.

பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. -வள்ளுவர்

☆ உலக சுகம் நாடுவது மரணம் தரும். ஆன்ம சுகம் நாடுவது வாழ்வும் சாந்தியும் தரும். இ

☆ நின்னை அறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே
பின்னையுான் யாரைப் பெறுகிற்பென் - நின்னை
அறப்பெறு கிற்பெனேல் பெற்றேன்மற்று ஈண்டே
துறக்கம் திறப்பதோர் தாழ். - அறநெறிச்சாரம்

☆ ஆசைகளுக்கு அடிமை யாகிறவன் விமோசனம் அடையான். ச

☆ ஆசையை வென்றவன் அநேகம் வென்றவன். ச

☆ ஆயிரக்கணக்கான வீரர்களை வெல்பவனைவிடத் தன்னையே வெல்பவன் சிறந்தவன். ச

## அழகு

☆ உலகிலுள்ள மூன்று அழகான பொருள்கள் இவை : சகோதர ஒற்றுமை, அயலார் அன்பு, தம்பதிகள் சமாதானம். கி

## அழுக்காறு

☆ அழுக்காறு கொள்ளாதீர்கள். நெருப்பு விறகை உண்டு விடுவதுபோல் அழுக்காறு அறச் செயல்களை அழித்து விடும். இ

## அற்புதங்கள்

☆ மதத்தின் உண்மையை நிறுவ அற்புதங்கள் தேவையில்லை. ச

## அறந் தவறியவர்

☆ அறநெறியில் நிற்காதவருடன் சேராது விலகுக, அப்போது அவர் நாணம் அடைவர், ஆனால் அவரைப் பகைவராகக் கருதாமல் சகோதரராகவே கருதி நல்லறிவு கொளுத்துக. கி

## அறநெறி

☆ அறநெறி நேரானது, சீரியது, ஆனால் மக்கள் வேறு நெறிகளையே தேடுகின்றனர். தா

☆ உண்மையான அறம் நீர்போல் தீமை செய்யாமல் நன்மையே செய்யும், நீர்போல் தாழ்ந்த இடத்தில் நின்று பரம்பொருளை ஒக்கும். தா

☆ தீமையை மறைவாகச் செய்பவனைக் கடவுள் தண்டிப் பார், மறைவின்றிச் செய்பவனை மக்கள் தண்டிப்பர், கடவுளையும் மக்களையும் அஞ்சி நடப்பவன் தனியே நடக்க வல்லவன். தா

☆ அறத்திடம் அசையாத நம்பிக்கை உடையவனால் ஆகாத காரியம் எதுவும் கிடையாது. தா

☆ அறநெறியில் நிற்பதாக ஆணவம் கொள்ளாதவரே யாவராலும் அன்பு செய்யப்படுவர். தா

☆ அறநெறி நிற்போர் அனைவரும் குழந்தை உள்ளம் உடையவர். தா

☆ அறத்தை விரும்புவோர் கடமைகளைச் செய்வர், அறத்தை விரும்பாதவர் உரிமைகளைக் கேட்பர். தா

## அறம்

☆ நன்மை செய்பவன் நல்ல குணமுடையவனாக ஆகி விடுவான். தீமை செய்பவன் தீயகுணமுடையவனாக ஆகிவிடுவான். எதைச் செய்கிறானோ அதுவாக ஆகி விடுவான். - வேத

☆ ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். - வள்ளுவர்

☆ செல்வத்தை மட்டும் இழந்தவன் எதையும் இழந்த வனாகான், ஆனால் ஒழுக்கத்தை இழந்தவனோ அனைத்தையும் இழந்தவனே.

☆ மனிதன் வளர்வதும் முன்னேறுவதும் அறத்தினா லேயே; பிறர்க்குத் தீங்குச் செய்யாதிருப்பதே அறம், அறமே உலகத்தைத் தாங்கி நிற்பது.

☆ எது உனக்குத் துன்பமாயிருக்குமோ அதைப்பிறர்க்குச் செய்யாதே, அதுவே அனைத்தறன். - மகாபாரதம்

☆ அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. - வள்ளுவர்

☆ பொய் குறளை வன்சொல் பயனில-என்றிந் நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது - மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல். - குமரகுருபரர்

☆ அறிவும் அறமும் உடையவனாய், உண்மை உரைப்பவனாய், நடுநிலைமை தவறாதவனாய், தன் கருமத்தில் கண்ணுடையவனா யிருப்பவனைப் பெரியோர்கள் போற்றுவர். பௌ

☆ குலமும் குடியும் பெருமை தருவதில்லை, பெருமை தருவன உண்மையும் ஒழுக்கமுமே. - பௌ

☆ இனியவை கூறல், நல்லன ஈதல், உதவி செய்தல், நடுநிலை நிற்றல், இவற்றால்தான் உலகம் உள்ளதாகும். பௌ

☆ ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்,
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை. பௌ

☆ கழிபெருஞ் செல்வக் கள்ளாடு அயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ? பௌ

☆ இருளே உலகத்து இயற்கை, இருளறுக்கும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை, கைவிளக்கின்
நெய்யே தன் நெஞ்சத்து அருளுடைமை, நெய்பயந்த
பால்போல் ஒழுக்கத்தவரே பரிவிலா
மேலுலகம் எய்து பவர். அறநெறிச்சாரம் ச

☆ பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து
ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல், யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு. நாலடியார் ச

☆ நல்ல நம்பிக்கையின்றி நல்ல அறிவு உண்டாகாது;
நல்ல அறிவின்றி நல்ல ஒழுக்கம் உண்டாகாது. ச

☆ ஆசைகளை அகற்றினால் மட்டுமே அறநெறியில் நிற்க இயலும். ச

☆ அறமும் உயிரும் - இரண்டையும் போற்றுவேன், ஆனால் இரண்டையும் பெற இயலாதாயின் உயிரைத் துறந்துவிட்டு அறத்தைக் காப்பேன். க

☆ சகல பிராணிகளிடத்திலும் இரக்கம் கொள்ளுதல், சகல மனிதரிடத்திலும் அன்பு கொள்ளுதல், தன்னல எண்ணங்களுக்கு இடந் தராதிருத்தல், இவையே அறத்தின் இலக்கணம். க

☆ உனக்கு எதை விரும்பமாட்டாயோ அதைப் பிறர்க்கும் விரும்பாதே. க

☆ உண்மையாக நடப்பதே அறநெறியின் உண்மையான இலட்சணம். க

☆ உலகத்தில் உள்ள வழிகள் இரண்டே; அன்பு கொள்வது, அன்பு செய்யாதிருப்பது, எல்லாம் இதில் அடங்கும். க

☆ உன்னிடமுள்ள நற்குணத்தை நான் மறைத்துவிடத் துணியேன். என்னிடமுள்ள தீய குணத்தை நான் மன்னித்துவிடத் துணியேன். க

☆ உண்மையான அறம் பிறரிடம் அன்பு கொள்வதே; உண்மையான அறிவு பிறரை அறிந்து கொள்வதே. க

☆ அறநெறியில் பிறழா வண்ணம் மூன்று ஆண்டு காலம் நடப்பவர் இன்பம் காணாதிருக்க முடியாது. க

☆ இரக்கமுள்ள நெஞ்சில் அன்பு பிறக்கும்; நாணமுள்ள நெஞ்சில் அறம் பிறக்கும்; நன்மை தீமை தெரியும் நெஞ்சில் மெய்யுணர்வு பிறக்கும்; ஆணவம் இல்லாத மனிதர் கிடையார். க

☆ மனித குணம் அறத்தை நாடுவது தண்ணீர் தாழ் நிலம் நாடுவதை ஒக்கும். கீழ் நோக்கி ஓடாத நீர் இல்லாதது போல் அறம் நோக்கும் இயல்பு இல்லாத மனிதர் கிடையார். க

☆ தன்னை அறப் பெறுவதே தலையாய அறம். தன் னலத்தை ஒரு நாள் காலம் துறந்தாலும் போதும், சகமனைத்தும் புகழும். க

☆ அறம் என்பது கைக்கு அகப்படாத ஒன்றா? இல்லை, அண்மையிலேயே உளது. க

☆ அறம் தனித்து வாழாது, அநேகர் அதைச் சூழ்ந்து கொள்வர். க

☆ அறநெறி நிற்பவரே பிறரிடம் உண்மையான அன்பு காட்ட முடியும். க

☆ அறம் என்பது யாது? உண்மையான சிக்கெனப் பிடித் தல், இறைவனிடம் சரண் புகுதல், தன்னை அறவே ஒழித்தல், எப்போதும் மகிழ்ந்திருத்தல், இறைவனைச் சிக்கெனப் பிடித்தல். கி

☆ அறம் இது வென்று அறிந்து அதைச் செய்யாதிருப்பது கோழைத்தனமாகும். கி

☆ அறமே உயிரினும் உயர்ந்து. கி

☆ கோவிலில் போய் மூன்றுநாள் உண்ணாவிரதமிருப் பதினும் சாலச் சிறந்தது ஓர் அறச்செயல். கி

☆ ஆன்மாவுக்கு வண்மை நன்று, மக்களுக்கு உண்மை நன்று, அறநெறி நின்று தீமையை ஒழிப்பதற்குத் திருப்தி நன்று. ஜா

☆ நற்செயல்களைச் சேகரம் செய்க, அவையே விமோ சனம் அளிக்கும். உலகில் தோன்றுவன அனைத்தும் அழியும். அழியாமல் நிற்பன ஒழுக்கமும் பிறர்க்கு உதவுவதுமே யாகும். ஜா

☆ மனிதன் செய்யவேண்டிய தலையாய அறங்கள் மூன்று: பகைவனை நண்பனுகச் செய்தல்; தீயொழுக்க முடையவனை நல்லொழுக்க முடையவனுகச் செய் தல், அறிவில்லாதவனை அறிவுடைவனுகச் செய்தல். ஜா

☆ கடவுள் கூறுகிறார்: நான் விண்மீன்கள், திங்கள், ஞாயிறு, விலங்குகள் அனைத்தும் படைத்தேன். ஆனல் இவை எல்லாவற்றிலும் சாலச் சிறந்ததாக சன்மார்க்க நெறியில் நிற்கும் மனிதனைப் படைத் தேன். ஜா

☆ உலகத்தில் மனிதன் ஆசைப்படக் கூடிய ஒன்று உளது. அதுவே அறம். ஜா

☆ அறவாழ்வு என்பது யாது? உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள், வாக்கில் இனிய மொழிகள், மெய்யில் நல்ல செயல்கள் உடைமையே யாகும். ஜா

☆ உண்மையின் நண்பராய், அறநெறியில் நிற்க ஆசைப் படுவோர் அனைவரும் கேளுங்கள்:
புனிதன் மதத்தை விரும்பினுல் பொய்யையும் கோபத் தையும் இம்சையையும் விட்டு ஒழியுங்கள். பகை யையும் துவேடத்தையும் அகற்றுங்கள், அத்தகைய நல்லோர் ஆண்டவன் சந்நிதி அடைவர். ஜா

☆ கடவுளை அஞ்சி நடக்கும் வழியைக் காட்டுகிறேன், வாருங்கள். தீயன பேசாதே, பொய் கூறாதே, தீ நெறி விட்டு விலகு, நன்மை செய், அமைதியைத் தேடு, அனைவர்க்கும் அதைச் செய். எ

☆ அற நெறியில் நிற்பவர் ஆண்டவன் தேவ தூதரினும் பெரியோராவர். எ

☆ அறவோர் இறப்பதில்லை. ஏ

☆ உனக்கு விரும்பாததைப் பிறர்க்குச் செய்யாதே - இதுவே அனைத்தறன், மற்றவை எல்லாம் அதன் விரிவுரையே. எ

☆ அறம் செய்பவர் துன்பமுறுவதும், அல்லாதவர் இன்ப முறுவதும் யாராலும் அறிய முடியாதவை. எ

☆ அறவோனை அறவோன் என்பதற்காக வரவேற்பவன் அறவோனுக்குரிய அருளைப் பெறுவான். கி

☆ கடவுள் மக்களுள் வேற்றுமை பாராட்டுவதில்லை எவராயினும் தம்மை அஞ்சி அறநெறி நிற்போர் அனை வரையும் அவர் தம் அடியாராக ஏற்றுக் கொள்வர். கி

☆ அறத்துக்காகத் துன்புற நேர்ந்தால் நீங்கள் இன்ப வாழ்வு பெற்றவரே. கி

☆ கடவுள் அறவாணன். அறம் செய்வோர் அனைவரும் அவனுடைய குழந்தைகளே. கி

☆ பரசுபரம் பளுவைத் தாங்கி உதவி செய்து கொள்ளுங் கள். இதுதான் கட்டளையை நிறைவேற்றுவதாகும். கி

☆ கடவுளை உன் இதயம் முழுவதையும் கொண்டு நேசிப்பாய். இது முதற் கட்டளை. இதுபோன்ற இரண்டாவது கட்டளை, உன்னைப்போலவே பிறரை யும் நேசிப்பாய். இந்த இரண்டு கட்டளைகளிலும் எல்லா அறநூல்களும் அடங்கும். கி

☆ நேரன வாயில் வழிப் புகுக. அழிவுக்குச் செல்லும் வழியும் அகலமானது. வாயிலும் அகலமானது. அதன் வழிச் செல்வோர் பலராவர். அறத்துக்குச் செல்லும் வழி நேரானது, குறுகியது, அதில் செல்வோர் சிலரே.

கி

☆ அறம் செய்க. அறம் செய்பவரையே அல்லா விரும்புகிறார். இ

☆ அறத்தில் உயர்ந்தது எது? மக்களிடையே சமாதானம் நிலவுமாறு செய்வதே. இ

☆ அனாதைக் குழந்தைகளைக் காப்பாற்றுகிற வீடே அல் லாவுக்கு மிகவும் பிரியமான வீடு. இ

☆ மக்களில் மிகக் கெட்டவன் எவன் என்று கூறட்டுமா? உதவி கேட்கும்போது ஒன்றும் கொடாதிருப்பவனே.

இ

☆ அறநெறி என்பது இதுவே:கடவுளிடம் உண்மையான பக்தி, தன்னை ஒறுத்தல், எல்லோரிடமும் நீதிசெய்தல், பெரியோரைப் பேணுதல், சிறியோரிடம் அன்பு செய் தல், ஏழைகளிடம் இரக்கம் கொள்ளுதல், நண்பர்க்கு நல்லுரை கூறுதல், பகைவனிடம் பொறுமை. இ

☆ அழியா இன்பம் தரும் அறநெறி குறுகியது, கடுகளவு அகலம் கூட இராது. ஆனல் மனமோ யானை அளவு பெரியது. அது எப்படி அந்த நெறியில் செல்ல முடியும்? பௌ

☆ உடலினுள் நன்மை தீமை என்னும் உடன் பிறந்தார் இருவர் உளர்.

பௌ

☆ கடவுள் ஒருவனை அழிக்க விரும்பினுல் முதற்கண் அவனை அறத்தை இழக்குமாறு செய்கிறார். பௌ

☆ சிறதே உண், சிறதே உறங்கு, பொறுமையையும் கருணையையும் பூண்டுகொள். பௌ

## அறிஞர்

☆ அறிவில்லாதவன் தன் அறியாமையை அறிந்தால் அந்த அளவுக்கு அறிவுடையவனே. பௌ

## அறிவு

☆ சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. - குறள்

☆ அறிவினுல் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை. - குறள்

☆ அறிவினுளெல்லாம் தலையென்ப,தீய
செறுவார்க்கும் செய்யா விடல். - குறள்

☆ தீ யொழுக்கத்தை விட்டவன் அறிஞன்; தீ யொழுக் கத்தை விடாதவன் அறிவிலி. ச

☆ கற்கக் கற்க நிறையாதது அறிவு. கற்பிக்கக் கற்பிக்கச் சோர்வடையாதது அன்பு. பௌ

☆ அறிஞர் சிந்தனை செய்யாதிருந்து அறிவிலிகள் ஆகின் றனர். அறிவிலிகள் சிந்தனை செய்து அறிஞர் ஆகின் றனர். பௌ

☆ அறிஞர் செய்யத் தக்கதை அறிவர், அறிவிலார் நலம் தருவதை அறிவர். பௌ

☆ நீ அறியும் போது அறிவதாக அறிவதும், அறியாத போது அறியாததாக அறிவதுமே உண்மையான அறி வாகும். பௌ

☆ அறிவை அகத்தே காணாதவனுக்கு எந்த விளக்கு ஒளி தர வல்லது? இதயத்தில் தூய்மை இல்லாதவனுக்கு எந்த பிரார்த்தனை பயன் தர வல்லது? பௌ

☆ அறிய முடியாதவற்றை அறியவில்லை என்று அறிவதுவே மனநலம். அறியக் கூடியவற்றை அறியாதிருப்பதே மனநோய்.. தா

☆ அறிவில்லை என்று அறிபவன் அறிவிலி யாகான். தன் பிழையை உணர்பவன் தவறு செய்தவனாகான். தா

☆ அறிவு குறைவாயினும் அறநெறியில் நிற்க முடியும். தா

☆ அறவிதியைத் தெரிவது அறிவு. அதைத் தெரியாதிருப்பது துன்பம். தா

☆ தன் சிறுமையை உணர்வது அறிவு. அனுதாபம் காட்டுவது ஆற்றல். தா

☆ அறிபவர் பேசார், பேசுபவர் அறியார். தா

☆ அறியாதபோது அதை அறிவது சிறந்தது. அறியாதபோது அறிவதாக எண்ணுவது அகற்ற முடியாத நோயாகும். இந்த நோயை நோயென்று அறிபவனே அந்த நோயை அகற்ற முடியும். தா

☆ பிறரை அறிபவன் அறிவாளி, தன்னை அறிபவன் அறிவாளிகளுள் சிறந்தவன். பிறரை வெல்பவன் பலவான், தன்னை வெல்பவன் பலவான்களுள் சிறந்தவன். த

☆ விலை கொடுத்து வாங்க முடியாதது அறிவு ஒன்றே. எல்லாச் செல்வங்களினும் ஏற்றமுடையது அறிவு ஒன்றே. ஜா

☆ அறிவே அறநெறி தரும், மறநெறி விலக்கும். ஜா

☆ அறத்துடன் சேராத அறிவு அறிவாகாது. ஜா

☆ கடவுளிடம் அச்சம் கொள்வதே அறிவு பெறுவதின் தொடக்கம். கடவுளை அறிவதே அறிய வேண்டிய அறிவு. எ

☆ அறியவில்லை என்று அறிபவனே அறிவு உடையவன். எ

☆ அறிவு அம்மையின் வழிகள் இன்பம் தருவன. அமைதி அளிப்பன,. அவளைக் காண்பவனே அருள் பெற்றவன். எ

☆ கடவுள் காட்டும் நெறியில் நிற்பதே அறிவு. தீயநெறி விட்டு விலகுவதே அறிவு. எ

☆ அறிவு அம்மையின் கையைச் சிக்கெனப் பிடித்துக் கொள், அவளே உன் உயிர். எ

☆ உன்னை அறிந்து கொள்வதே உச்சமான அறிவு. எ

☆ இல்லதென் அறிவு பெற்றால்? உள்ளதென அறிவு இன்றேல்? எ

☆ உங்களில் அறிவுடையோர் எவர்? அறிவோடு சேர்ந்து அன்பைக் கொண்டு அறச் செயல்கள் செய்து அறிவுடையோர் என்று காட்டட்டும். கி

☆ அறிந்துவிட்டதாகச் சொல்பவன் அறிந்தவனல்லன். அறிந்தவனை அனைவரும் அறிவர். பௌ

☆ அறிவைத் தாயாகவும்,திருப்தியைத் தந்தையாகவும், உண்மையை உடன்பிறந்தானாகவும் கொள்க. அதுவே சிறந்தது. பௌ

## அன்பு

☆ ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நினைந்து கொள். - ஔவையார்

☆ அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. - திருமூலர்

☆ அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்,
மறத்திற்கும் அஃதே துணை. - வள்ளுவர்

☆ அறநெறியில் நிற்பது ஒழுக்கம், அன்பின் மூலமாகவே அதைப் பெற முடியும், அன்பே மனித குலத்தின் அடிநிலை இயல்பு. க

☆ வாழ்க்கையில் வழிகாட்டும் சொல் ஒன்று உளதா? அனுதாபம் அல்லவா அச் சொல்? ஆம் உனக்கு நேர விரும்பாததைப் பிறர்க்கு நேர விரும்பாதே. க

☆ மனிதப் பண்பைக் காண்பது அன்பு ஒன்றிலேயே. க

☆ அன்பு உடையவர்க்குப் பிறர் குறைகள் புலனாகா, அன்பு இல்லாதவர்க்குப் பிறர் குணங்கள் புலனாகா, ஆம் தந்தைக்குத் தனயன் தவறு தெரிய மாட்டாது. க

☆ அன்பு என்பது யாது? மனிதர்களை நேசிப்பதே. அறிவு என்பது யாது? மனிதர்களைத் தெரிவதே. க

☆ தண்ணீர் நெருப்பை அவித்து விடுவதுபோல் அன்பு வேடத்தை அவித்துவிடும், ஆனால் இக் காலத்தில் அன்பு வழி நிற்போர் எரியும் மரத்தைத் அவிக்க இரண்டு கரண்டி நீரைத் தெளிப்பவராவார். நெருப்பு அவியா ததைக் கண்டு நீரால் நெருப்பை அவிக்க முடியாது என்று கூறுவர். க

☆ அன்பு செய்ய விரும்பாதவன் அறிவு பெறுவது எப்படி? அன்பு செய்யக்கூடிய போது செய்யா திருப்பதே அறிவின்மை யாகும். அன்பும் அறிவும் இல்லாதவன் அடிமையே. க

☆ நீ அன்பு செய்தும் பிறர் அன்பு செய்யாவிட்டால் உன்னுடைய அன்பை ஆய்ந்து பார், நீ மரியாதை செய்தும் பிறர் மரியாதை செய்யாவிட்டால் உன் னுடைய மரியாதையை ஆய்ந்துபார். க

☆ வாழ்நாள் முழுவதும் மறக்காதிருக்க வேண்டிய அறவிதி எது? பிறரிடம் அன்பாக நடந்து கொள், பிறர் உனக்கு எதைச் செய்யாதிருக்க வேண்டும் என்று எண்ணுகி றாயோ அதை அவர்க்குச் செய்யாதிரு என்பதே. க

☆ அன்பு கொள்வதே மக்கள் இனத்தின் சிறப்பியல் பாகும். க

☆ அன்புடையோர்க்குப் பகைவர் இலர்.

☆ நெஞ்சில் அன்பு இல்லாதவன் - அவன் கிரியைகள் செய்வதால் யாது பயன்? க

☆ அன்பு செய்யாமையினும் பெரிய தீமை உலகில் கிடையாது. க

☆ நல்லவனோ தீயவனோ யாரிடத்தும் அன்பாயிரு, தீயவழியினின்று விலக்குவதே தீயவனுக்குச் செய்யும் அன்பாகும். இ

☆ தனக்குச் சகல துணைவலியும் பொருள்வலியும் இருந்தும் தனக்குச் தீமை புரிந்தவரைப் பொறுத்துக் கொள்ளுகிற உயர்குண முடையவர்கள் நம் நாய கனிடம் நலம் பெறுவார்கள். இ

☆ கடினமான இதயத்தை உடையவன் கடவுளிடமிருந்து நீண்ட தூரம் அகன்றவனாவான். இ

☆ அன்புதான் தலைசிறந்த கொடை, அதுவே உயிரைக் காப்பதாம். பௌ

☆ கடவுளை அஞ்சி நடக்கும் சான்றோர் மனத்திலேயே அன்பு காணப்படும். பௌ

☆ அன்பில்லாத உடலைச் சுடுகாடு என்றே கொள்க. பௌ

☆ உலக சுகத்தில் இச்சையுள்ளவரையில் இறைவனிடம் அன்பு உண்டாக மாட்டாது. பௌ

☆ அன்பினால் விளைவது நன்மையா தீமையா என்று ஆராய்வோர் அன்பு செய்ய அறியாதவர். பௌ

☆ உன்னைப் பிறர் எவ்வாறு நடத்தவேண்டும் என்று விரும்புகிறாயோ அவ்வாறே நீ பிறரை நடத்துவாய். பௌ

☆ உன்னை நீ எவ்வாறு எண்ணுகிறாயோ அவ்வாறே நீ பிறரையும் எண்ணு, அதுவே உனக்குப் பேரின்பத்தில் பங்கு தரும். பௌ

☆ மக்களுக்குச் சேவை செய்வதே கடவுளுக்குச் சேவை செய்வதாகும், சேவை மூலம் தான் அன்பு பயன் தரும். பௌ

☆ அன்பு செய்பவரே வாழ்பவர், மற்றவர் அனைவரும் வாழாதவரே. அன்பு செய், யமபாசத்தை அறுத்து விடலாம். பௌ

☆ பொறுமையினும் உயர்ந்த தவமில்லை, திருப்தியினும் உயர்ந்த இன்பமில்லை, அவாவினும் பெரிய தீமையில்லை, கருணையினும் பெரிய அறமில்லை, மன்னித்தலினும் ஆற்றல் மிக்க ஆயுதமில்லை. பௌ

☆ மரம் தனக்காகப் பழுப்பதில்லை, ஆறு தனக்காக ஓடுவதில்லை, சான்றோர் தமக்காக வாழ்வதில்லை. பௌ

☆ அன்பு செய்வதே வழிபாடு; ஆசையை எரிப்பதே ஆராதனை. பௌ

☆ பிறரிடம் அன்பு செய்யாதிருத்தலைவிடப் பெரிய கேடு கிடையாது. தா

☆ மெழுகுவர்த்தி தன்னையே உண்டு பிறர்க்கு ஒளி தருகின்றது. கி

☆ இதயத்தில் அன்புடையோர் நீடு வாழ்வார். கி

☆ அன்பு செய்யும் இதயம் எப்பொழுதும் இளமை யுடையது. எ

☆ அன்புடன் விருந்தை உபசரிப்பவன் இறைவனுக்கே விருந்து செய்பவன். எ

☆ விருந்தோம்பல் கடவுள் வழிபாட்டின் ஒரு கூறே யாகும். எ

☆ நான் சொல்வதைக் கேள், அன்பான செயல்களே அனைத்து அறம். எ

☆ இகழ்பவனிடம் அன்பு செய், உனக்கு அறிவு கூடும், புகழ்பவனிடம் அன்பு செய்யாதே உன்னுடைய அறிவு குறையாது. ஏ

☆ அடுத்தவனிடம் அன்பு செய்பவன் ஆண்டவன் ஆணையை நிறைவேற்றுபவன். எ

☆ உன் சகோதரனை வெறுக்காதே, அவன் தவறு செய் தால் பழி வாங்காதே, உன்னைப்போலவே அவனை யும் நேசிப்பாய். எ

☆ நம்பிக்கையுடன் அறத்தைத் தேடு. அத்துடன் அறிவை; அறிவினுடன் பொறுமையை; பொறுமை யுடன் சகோதர வாஞ்சையை; சகோதர வாஞ்சையுடன் அன்பை. கி

☆ கண்ணால் காணும் சகோதரனை நேசியாதவன் கண் ணால் காணாத கடவுளை நேசிப்பது எங்ஙனம்? கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிக்கக் கடவன் என்பதும் கடவுள் கட்டளை. கி

☆ அன்பு செய்வதை நிறுத்தாதே, அயலாராயினும் விருந்தோம்ப மறக்காதே, தேவதூதர்களைக்கூட இவ்வாறு அறியாமலே உபசரிக்கக்கூடும். கி

☆ உங்களிடையே அன்பு நிலவட்டும், அன்பு செய்தல் அநேக பாவங்களுக்குப் பரிகாரமாய் விடும். கி

☆ அன்பு இல்லாமல் அறவுரைகள் கூறுவது வெறும் செகண்டி அடிப்பதே. வருவதை உரைக்கவும் மலைகளை அகற்றவும் கூடிய ஆற்றல் இருப்பினும் அன்பில்லையானால் யாதொரு பயனும் உண்டாகாது. கி

☆ நான் என் செல்வம் முழுவதையும் கொண்டு ஏழைகளுக்கு அன்னமிட்டாலும், அவர்களுக்காக என் உடலையே அர்ப்பணித்தாலும், அன்பில்லையானால் யாதொரு பயனும் உண்டாகாது. கி

☆ அறங்கள் அனைத்தினும் அன்பே உயர்ந்தது. கி

☆ உலகம் தோன்றின நாள் முதல் நாம் கேட்டுவரும் உபதேசம் இது! பரசுபரம் அன்பு செய்யுங்கள் என்பதே. கி

☆ கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிப்பான் என்று கடவுளே அருளியிருக்கிறார். கி

☆ நான் சுதந்திரம் உடையேன், ஆயினும் அனைவர்க்கும் ஊழியனாக இருந்து வருகின்றேன். கி

☆ எந்த மனிதனையும் இழிந்தவன் என்று கூறலாகாது என்று எனக்குக் கடவுள் காட்டியுள்ளார். கி

☆ சகோதரரிடம் அன்பு செய்வதால் நாம் மரணத்திலிருந்து வாழ்வுக்குச் சென்றுவிட்டோம். கி

## ஆசை

☆ ஆசையுடையவன் நெஞ்சு வறியது, ஆசைப்படாமை அதை நிறைத்துவிடும். க

☆ எங்கே பற்று உண்டோ அங்கே பந்தம் உண்டு, பற்று நீங்கினால் பந்தம் அறும், பந்தம் அறுந்தால் இன்பம் பிறக்கும், இதுதான் வாழ்க்கை முறை. தா

☆ சான்றோர் தம்மை மறப்பதால் காப்பாற்றப் படுகின்றனர். தன்னலம் இல்லா திருப்பதால் தம்முடைய நலத்தைப் பெறுகின்றனர். தா

☆ அடியவரே ஆசையை அகற்றுங்கள், ஆசையை அகற்றினால் கடவுளுக்கு இணையாக உயர்வீர். கி

☆ ஆசை உன்னை வென்று அழிக்குமுன் ஆசையை வென்றுவிடு. கி

☆ கடவுளிடம் பக்தி செய்தாலன்றி மனத்திலிருந்து ஆசையை அகற்ற முடியாது. பௌ

☆ இறைவனிடம் அன்பு செய், இதயம் தூய்மை அடைந்துவிடும். பௌ

☆ ஆசையுள்ள இடத்தில் அன்பு இருக்க முடியுமா? பௌ

☆ ஆசையே, நீயே எனக்கு நரகத்தில் இடம் அமைப்பவன். என்னைப் பலமுறை பிறந்து உழலச் செய்பவன். பௌ

☆ அரசபதவி, செல்வம், அதிகாரம், உலக நலன்கள் இவை ஒன்றையும் விரும்பேன். பௌ

## ஆணவம்

☆ தன்னை வெல்வதே கடினம், தன்னை வென்றுவிட்டால் சகலமும் வென்றுவிடலாம். ச

☆ உதவி பெற விரும்பினால் ஆணவத்தை அகற்று, ஆணவம் மயிரிழையாக இருந்தாலும் மலைபோல் நின்று தடுத்துவிடும். சி

## ஆன்மா

☆ ஆன்மாவை எந்த ஆயுதமும் அணுகாது, நெருப்பு எரிக்காது, நீர் நனைக்காது, காற்று உலர்த்தாது. பௌ

☆ ஆன்மா அழியாதது, நித்தியமானது, அசையாதது, நிலைத்து நிற்பது, இந்த உண்மையை உணர்ந்து துக்கப் படாதே. -பகவத் கீதை

☆ ஆன்மாவைக் கொல்ல முடியாமல் உடலைக் கொல் பவருக்கு அஞ்சற்க. ஆன்மாவையும் உடலையும் கொல்பவருக்கே அஞ்சுக. கி

## ஆற்றல்

☆ அறத்தின் ஆற்றல் உடையவரே ஆற்றல் உடையவர். அறிவோரை மகிழ்வியாதவர் யாதும் செய்ய இய லாதவரே. தொ

☆ எல்லோரினும் அதிக ஆற்றல் பெற விரும்பின் இறை வன் மீது முழு நம்பிக்கை கொள்க. இ

☆ கோபம் உண்டாகும் சமயத்தில் அதை அடக்க வல்ல வனாக உள்ளவனே ஆற்றல் மிகுந்தவன். இ

## இம்சை

☆ உயிர்களைக் கொன்றுவிட்டு அதை மதக் கடமையாகக் கருதுகிறாய், அப்பா! சகோதரனே! அப்படியானால் மத விரோதமானது எது? அதை எனக்குச் சொல் பௌ

☆ நீ நியாயம் என்று கூறினாலும் ஹிம்சை செய்வது எப்போதும் கொடுங்கோன்மையே. பௌ

☆ சகல மதங்களையும் உண்டாக்கிய கடவுள் சகோதரர் கள் ஒருவரை ஒருவர் ஹிம்சிக்கலாம் என்று கூற வில்லை. பௌ

☆ சான்றோர் ஆற்றலிருப்பினும் ஆணவம் கொள்ளார், அயலார்க்குத் தீங்கு செய்யார். ச

## இரக்கம்

☆ ஏழைகளைத் துன்புறுத்துவோர் இறைவனை நிந்திப்பவர். இறைவனை வணங்குபவர் ஏழைகளிடம் இரக்கம் உடையவர். கி

## இலட்சியம்

☆ மனித வாழ்வின் தலை சிறந்த இலட்சியம் உண்மையைத் தேட ஆசை கொள்வதே. - பாகவதம்

☆ வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். - வள்ளுவர்

## இன்பம்

☆ துன்ப மின்றித் துயரின்றி என் றுநீர்
இன்பம் வேண்டின் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவனென் றுள்குவார்க்கு
அன்ப னாயிடும் ஆனைக்கா அண்ணலே.
- திருநாவுக்கரசர்

☆ அழுக்காற்றால் நெஞ்சம் அழுங்கிய புன்மாக்கள்
இழுக்காற்றால் இன்பநலம் எய்தார் பராபரமே

யான் எனது அறத் துரிய நிறைவாகி நிற்பதே
இன்ப மெனும் அன்பு முண்டு. - தாயுமானவர்

☆ பூத மைந்தொடு வேள்வி யைந்து புலன்களைந்து பொறிகளால்
ஏத மொன்று மிலாத வன்கையி னார்கள் வாழ்திருக் கோட்டியூர்

☆ ஏத னைன்ர சிங்க னைகலின் றேத்து வார்களுழக்கிய
ஏனைத் துலி படுத லாலிவ்வுலகம் பாக்கியம் செய்ததே.
- பெரியாழ்வார்

☆ நயவேன் பிறர்பொருள்; நள்ளேன் கீழாரோடு
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்; வியவேன்
திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்;
வரும் ஆறு என், என்மேல் வினை -பொய்கையாழ்வார்

☆ நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நலலூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப் பித்தொழுது
ஏத்தும் அடியார்கட் கில்லை யிடர் தானே.

- திருஞானசம்ந்தர்

☆ கொடுத்தேனே யென்னைக் கொடுத்தவுடன் இன்பம்
மடுத்தேனே நீடுழி வாழ்ந்தே - அடுத்தேனே
பெற்றேனே பெற்றுப் பிழைத்தேனே சன்மவல்லல்
இற்றேனே ஏழை அடியேன். - தாயுமானவர்

☆ பையார் அரவே ரல்கு லாளொடும்
செய்யார் செம்பொன் பள்ளி மேவிய
கையார் சூல மேந்து கடவுளை
மெய்யால வணஙக மேவா வினைகளே,
தாமென்றும் மனந்தளராத் தகுதியராய் உலகத்துக்
காமென்று சரண்புகுந்தரர் தமைக்காக்குங்
கருணையினான்
ஓமென்று மறைபயில்வார் பிரமபுரத் துறைகின்ற
காமன்றன் உடலெரியக் கனல் சேர்ந்த கண்ணானே.

- திருஞானசம்பந்தர்

☆ கடவுளைத் தம்மிடத்தில் காணும் அறிஞரே அழியா இன்பத்தை அடைவர், ஏனையோர் அடையார்.

உபநிடதம்

☆ புறப் பொருள்களில் பற்று இல்லாமல் அகத்திலேயே இன்பத்தைக் காண்பவனே அழியாத இன்பம் அடைவான்.

பௌ

☆ ஆசைகள் வழியே செல்பவன் இன்பம் அடையான், பரகதி எய்தான்.

- பகவத்கீதை

☆ நீ நலம் பெறாவிட்டாலும் பிறர் நலம் கண்டு மகிழ்வாய், சான்றோர் பிறர் இன்பம் பெறக் கண்டு தாங்களும் மகிழ்வர். இன்பம் வேண்டியதே, அது ஆன்மாவின் லட்சணமே, அறமே அதைத் தருவதாகும்.

- மகாபாரதம்

☆ அறநெறி அடைந்துவிட்டாய், பகைமையை ஒழித்து விட்டாய், இன்பத்தைக் கண்டுவிட்டாய். - வேதம்

☆ மக்களுக்குத் துன்பம் உண்டாவது மறத்தாலேயே மக்கள் அழியாத இன்பம் பெறுவது அறத்தாலேயே.

- பகவத்கீதை

☆ எவன் எல்லாப் பிராணிகளையும் சமமாக எண்ணுகிறானோ, எவன் எதனிடத்திலும் தீமை எண்ணாதிருக்கிறானோ அவனே இன்பத்தைக் காண்பவன்.

- விட்ணு புராணம்

இன்பம் இடையறா தீண்டும், அவாவெனும்
துன்பத்துள் துன்பம் கெடின்.
திருவள்ளுவர்

அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.
திருவள்ளுவர்

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். திருவள்ளுவர்

☆ அறநெறி நிற்பவன் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் அடைவான், அவன் தான் செய்த நன்மையை நினைந்து இன்புறுவான்; செய்யப் போகும் நன்மையை நினைந்து அதனிலும் அதிகமாக இன்புறுவான்.
பௌ

☆ நம்மை வெறுப்பவரையும் வெறுக்காமலிருப்பதால் விளையும் இன்பமே! நீ என்றும் வாழ்க. பௌ

☆ வெற்றி பகைமையை விளைக்கும், வெல்லப்பட்டவர் துன்புறுவதால், வெற்றி தோல்வி இரண்டையும் கருதாதவர் திருப்தியுறுவர், இன்பம் அடைவர். பௌ

☆ தானம், சீலம், நட்பு இம் மூன்றும் நாடுபவர் இன்ப உலகம் சேர்வர். பௌ

தோடார் இலங்கு மலர் கோதி வண்டு
வரிபாட நீடு துணர்சேர்
வாடாத போதி நெறி நீழல் மேய
வரதன் பயந்த அறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை
குணனாக நாளும் முயல்வார்
வீடாத இன்ப நெறி சேர்வர், துன்ப
வினைசேர்தல் நாளும் இலரே. பௌ

☆ நூல்விளைந் தனைய நுண்சொல்
புலவரோடு அறத்தை ஓம்பின்
மேல் விளையாத இன்பம்
வேந்த! மற்றில்லை கண்டாய்! பௌ

அறிவினால் பெரிய நீரார்
அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி இன்பம்
நிறைகடல் அகத்து நின்றார்;
பொறியெனும் பெயரவை வாய்ப்
பொங்கழல் அரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார்
வேதனைக் கடலுள் நின்றார். - சிந்தாமணி

☆ தன்னைக் கொண்டு தன்னை வெல்பவனே இன்பம் அடைவான்.

☆ தன்னை அடக்குவது கடினம், ஆனால் தன்னை அடக்காதவர் இன்பம் காணமுடியாது.

☆ எதையும் தமது என்று கூறாதவர் இன்பம் கண்டவர். பௌ

☆ இன்பமும் துன்பமும் எப்போதும் மனிதன் தானாகத் தேடிக்கொள்வனவே, புறத்தேயிருந்து வருவனவல்ல. க

☆ உண்ணச் சோறும், பருக நீரும், தலைவைத்துப் படுக்க முழங்கையும் உடையேன், எனக்கு யாதும் குறைவில்லை இன்பமே எந்நாளும். க

☆ துய்க்கத் துய்க்கத் தேயாத இன்பம் பிறர்க்கு நன்மை செய்வதால் உண்டாகும் இன்பம் ஒன்றே. க

☆ இன்பமும் துன்பமும் ஊழால் வருவனவல்ல, நாமாகத் தேடிக்கொள்வனவே. க

☆ இன்பம் பெறுவதற்கான மூன்று இரகசியங்கள் இவை : தீமையைப் பாராதிருப்பது, தீமையைக் கேளாதிருப் பது, தீமையைச் செய்யாதிருப்பது. பௌ

☆ சான்றோர் இன்பத்தைக் காண்பது தங்கள் இதயத் திலேயே, அல்லாதோர் காண்பது அயல் விஷயங் களிலேயே. க

☆ இன்பமும் துன்பமும் வருவதற்கு வேறு வேறு வழிகள் கிடையா, அவை நன்மையையும் தீமையையும் நிழல்போல் தொடர்ந்து வருவன. தா

☆ இன்பம் அனுபவிப்பதாகத் தெரியாத இன்பமே பரிபூரணமான இன்பம்; புகழப்படுவதாகத் தெரியாத புகழே உண்மையான புகழ். தா

☆ இதயத்தில் அமைதி உண்டாவதே இன்பம், இதய நிறைவு இல்லாமையே துன்பம். தா

☆ இன்பம் இறகினும் மெல்லியது, இருந்தாலும் அதைத் தாங்க யாரும் அறியார். துன்பம் மண்ணினும் பளு வானது, ஆயினும் அது வராமல் காக்க யாரும் அறியார். தா

☆ தன்னைப்பற்றிய எண்ணத்தை நீத்துவிட்டு எல்லாம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து வாழ்ந்தால் எப்பொழுதும் இன்பமே. சி

☆ இன்பமும் துன்பமும் இதயத்திலேயே முளைப்பன, உலகம் என்பது நாம் ஆக்குவது போலவே ஆகும். சி

☆ அறம் உள்ள இடத்திலேயே இன்பம் உறையும். சி

☆ அஹுரா மஜ்தா வகுத்துள்ள அறநெறியில் நிற்பவரே அழியாத இன்பம் பெறுவார். ஜா

☆ எல்லா நலங்களினும் ஒழுக்கமே உயர்ந்தது, அதுவே இன்பம் தருவது. ஜா

☆ மக்களே நான் கூறுவதைக் கேளுங்கள், பொய்யாகிய சாத்தான் உங்கள் வாழ்வின் சாரதியாக உள்ளவரை நீங்கள் இன்பத்தைக் காணவே மாட்டீர்கள் பிறர்க்குத் தீமை செய்து பெறும் இன்பம் இன்பமன்று, நெஞ்சே! அறவோர்க்கு அழிவு தேடுவோர் ஆன்மாவை அழித்துக் கொள்பவரே. ஜா

☆ பிறர்க்கு இன்பம் உண்டாகுமாறு உழைப்பவரே இன்பம் காண்பவர். கடவுளே அவர்களுக்கு ஆற்றலும் உடல் நலமும் அருள்வீராக. ஜா

☆ பொறுமையோடு உள்ளவரை இன்பமாக வாழ்பவர் என்று கூறுவோம். கி

☆ கடவுள் ஒவ்வொருவனுக்கும் அவன் செய்யும் செயல்களுக்கு ஏற்றவாறு பலன் அருள்வார். கி

☆ கடவுளை நம்புங்கள், அவருடன் ஐக்கியமாக ஆசைப்படுங்கள், அவர் காட்டும் நெறியில் நில்லுங்கள், ஆனந்தம் அடைவீர்கள். கி

☆ கடவுள் அருளால் பெறும் இன்பம் செல்வத்தால் பெறும் இன்பத்தினும் சாலச் சிறந்தது. இ

ஈகை

☆ அணுவத்தனை உணவேனும் அயலார்க்கு அளிப்பவனிடம் அடுத்த கேள்வி கேட்கமாட்டேன்; அந்தக் கணமே ஆனந்த உலகம் அடைவான் என்று அஹுரா கூறுகின்றார். எ

☆ இல்லாதவர்க்கு உதவி செய்பவன் இறைவனை வணங்குபவன். எ

☆ உன்னிடம் உதவி வேண்டுபவன் இறைவனே என்று கருதுக. எ

☆ கைம்மாறு கருதாமல் உதவி செய்க, அவ்விதம் செய்வோரே அறவோர். தா

☆ நன்மை செய்வோர்க்கு நன்மை செய்வேன், தீமை செய்வோர்க்கு அவர்கட்கும் நன்மையே செய்வேன். நன்மை செய்து அவர்களையும் நல்லவர்களாகச் செய்வேன். தா

☆ பிறர்க்குக் கொடுக்குமளவு பெறுவோம், தனக்கு வைத்துக் கொள்ளுமளவு இழப்போம். தா

☆ கையில் பொருள் இருந்தால் அதனளவு பிறர்க்குக் கொடு, சிறிதே இருந்தால் அதனளவு கொடுக்கத் தயங்காதே. எ

☆ கடவுளை வணங்குவோரைவிடப் பிறர்க்கு ஈவோரே பெரியவர். எ

☆ ஈவோர் நினைவில் வைத்துக் கொள்ளுத லாகாது பெறுவோர் மறந்துவிடுத லாகாது. எ

☆ ஈகையே செல்வமுடமையைச் சுவை யுடையதாக ஆக்குவது. எ

☆ எவ்வளவு கொடுக்க எண்ணினாலும் அதை மன முவந்து ஈந்தால் போதும், மனமுவந்து ஈவோரே க்கடவுளுக்கு உகந்தவர். கி

☆ பெறுவதினும், கொடுப்பதே கடவுள் அருள் பெற்ற செயல். கி

☆ பிறர்க்குக் கொடுப்பவன் கடவுளுக்குக் கடன் தரு பவன், அவர் இருமடங்காய்த் தருவார். இ

☆ கைம்மாறு கருதித் தானம் செய்யற்க. இ

☆ தானே உழைத்துத் தேடியது சிறிதாக இருப்பினும் தன்னாலியன்றதைத் தருபவனே தலைசிறந்த தானம் செய்பவன். இ

☆ தானம் தரும்போது அது முதலில் கடவுள் கைக்குச் சென்று பின்னரே ஏழையின் கைக்குச் செல்கின்றது. இ

☆ தானம் கொடுப்பதற்குத் தேவையாவதுபோலவே தானம் பெறுவதற்கும் அறிவு தேவை. இ

☆ ஆசையுடன் தேடிவைத்திருப்பதைத் தானம் கொடுக் காதவரை நீ அறநெறி நிற்பவன் ஆகாய். இ

☆ எவன் பிறர்க்கு ஈகின்றானோ அவனே தன்னுடைய செல்வத்தைப் பாதுகாப்பவன். பௌ

☆ கேளாமலிருக்கும் போதே கொடுப்பவனுடைய பெருமையே பெருமையாகும்.

## உடம்பு

☆ உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

- திருமூலர்

## உடல்

☆ உனக்கு உடல் தந்திருப்பது உன்னுடைய நன்மைக் காக மட்டுமன்று. ஏ

## உண்மை

☆ உள்ளத்தில் உண்மை யில்லாதவன் ஒன்றுக்கும் உதவான். எந்த வண்டியேனும் அச்சாணி யில்லாமல் ஓட முடியுமோ? க

☆ உள்ளத்தில் உண்மை உடையவனே பிறரை நல்வழிப் படுத்த முடியும். க

☆ உள்ளத்தில் உண்மை உடையவன் எவன்? ஒழுக்க நெறியைத் தேர்ந்து உறுதியாய் நிற்பவனே.

☆ உண்மையை அறிபவன் உண்மையைக் காதலிப்ப வனுக்குச் சமமாகான். க

☆ சான்றோருடைய குறிக்கோள் உண்மையே, உண வன்று, உண்மையைக் காணாமற் போவோமோ என்று கவலைப்படுவர், வறுமை வந்துவிடுமோ என்று கவலைப்படார். க

☆ உள்ளதை உள்ளபடி உரையாத தெல்லாம் தவறாக உரைத்ததே. இந்தத் தீயொழுக்கத்தை விடாதவன் இருளுலகம் புகுவான். தா

☆ உண்மை இல்லாமல் சொல்வதெல்லாம் தவறாகச் சொல்வதே. தா

☆ உண்மை நெறியில் நிற்க விரும்புவோர் ஊனக் கண் களை மூடிக்கொண்டு ஞானக் கண்களைத் திறத்தல் வேண்டும். சி

☆ ஆசைகளைத் துறந்து கோபத்தை விட்டவரே உண்மை நெறியைக் காண்பார். சி

☆ உள்ளத்தில் உண்மையுடையார் தோல்வி அறியார், பிரார்த்தனை செய்தும் தோல்விகண்டால் பிரார்த்தனை உண்மையுடன் செய்யவில்லை என்று உணர்ந்து கொள். சி

☆ உள்ளத்தில் உண்மை உடையோர் அனைவரும் உடன் பிறந்தவரே. சி

☆ உண்மையாக ஒழுகுவதே கடவுளையும் மனிதனை யும் ஒன்றாக இணைப்பதாகும். சி

☆ இதயத்தில் உண்மை யுடையவன் செய்யும் பிரார்த் தனையையே இறைவன் கேட்டருள்வான். சி

☆ உள்ளத்தில் உண்மை யுடைமையே அறங்களுள் தலையாயது, அது உலகில் சர்வ சகோதரத்துவத்தை உண்டாக்க வல்லது. சி

☆ உண்மையுள்ள உள்ளமே அறிவின் பிறப்பிடம். சி

☆ ஆயிரக்கணக்கான பொய் பேசுவோரினும் உண்மை பேசும் ஒருவனே சிறந்தவன். ஜா

☆ பொய் பேசுவோரைக் கண்டு கடவுள் வருந்துவர், உண்மை பேசுவோரே அவருக்கு ஆனந்தம் தருவர். இ

☆ உண்மை பளுவானது அதனால்தான் அதைச் சுமப் பவர் சிலராக இருக்கின்றனர். இ

☆ உலக வியவகாரங்களில் உண்மையாக நடந்து கொண் டாயா என்பதே இறந்தபின் முதன் முதலாக இறைவன் கேட்கும் கேள்வி. இ

☆ உண்மையை அறிந்து கொள்ளுங்கள். உண்மை உங் களுக்குச் சுதந்திரம் தரும். கி

☆ கடவுள் உண்மையாகவே இருக்கிறார். ஆசை வழிச் செல்லாதே, உண்மையினின்றும் பிறழாதே. இ

☆ உண்மை வந்ததும் பொய் மறைந்துவிட்டது. ஆம் பொய் அழிவதே. இ

☆ வாக்குறுதியைக் காப்பாற்றாதவனிடம் மத விசுவாசம் என்பது கிடையாது. இ

☆ உண்மையை ஒத்த பக்தி கிடையாது, பொய்யை ஒத்த பாவமில்லை, உண்மை தங்குமிடமே உத்தமன் தங்குமிடம். பௌ

☆ வாயால் புகழ்வதால் தேவலோகம் போகமுடியாது, உண்மையாக நடந்தால்தான் விடுதலை பெறுவோம். பௌ

☆ உண்மை என்னும் அரசன் அமைதியாய் உறங்கு வான்; பொய் என்னும் திருடன் வெளியில் அலை வான். அரசன் விழித்து அவனைப் பிடித்துத் தண்டிப் பான். பௌ

## உலகம்

☆ உலக விவகாரத்தில் அதிகமாக ஈடுபடுபவன் ஆன் மாவை அழிப்பவன். ஜா

## எளிய வாழ்க்கை

☆ எளிய வாழ்க்கையே இதயத்தைத் தூய்மை செய்யும் ஆன்மாவைப் பாதுகாக்கும், அறநெறியில் நிற்க உதவும். தா

☆ எளிய வாழ்க்கை வாழ்பவன் எல்லோர்க்கும் உப யோகமாக இருப்பான். அவனைப் பார்த்து அயலாரும் அவ்விதம் வாழ்வர். தா

## ஏழைகள்

☆ விருந்து விழா நடத்தும்போது ஏழைகள், கூனர், குருடர், செவிடர், ஆகியோரையும் அழைத்துக்கொள், நீ அருள் பெறுவாய், அவர் கைம்மாறு செய்ய முடியாது ஆதலின். கி

## ஒழுக்கம்

☆ தன்னிடத்திலுள்ள தீயொழுக்கத்தை அறிந்து அதை விட்டு அகல்பவனே முன்னேற்றம் அடைபவன்.
பௌ

☆ உள்ளத்தை அடக்குவது கடினம், அது ஓடித் திரியும் இயல்புடையது. ஆனால் அதை அடக்கி ஆள்பவனே ஆனந்தம் அடைவான்.
பௌ

☆ தன்னை அடக்குகிறவனே தளபதிகளுள் தலை சிறந்தவன். பிறரை வெல்வதினும் தன்னை வெல்வதே சால நன்மை தருவது.
பௌ

☆ உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்
தெள்ளிதின் அப்பொருள் தெளிதல் காட்சியாம்
விள்ளற இருமையும் விளங்கத் தன்னுளே
ஒள்ளிதில் தரித்தலை ஒழுக்கம் என்பதே.
-சிந்தாமணி

☆ உதிர்ந்த மலர் மரத்தில் போய்த் தங்காது, உடைந்த கண்ணாடி உருவம் காட்டாது.
கி

## கடமை

☆ பிறர் கடமையை நன்கு செய்வதினும் தன்கடமையை அரைகுறையாகச் செய்யினும் பாதகமில்லை, அதுவே நல்லது.
- வேதம்

☆ கடமையைச் செய்பவனே பூரணம் அடைகின்றான்.
- பகவத்கீதை

☆ கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.
- வள்ளுவர்

☆ வெற்றியை விட்டுக் கடமையையே முதன்மையாகக் கொண்டால், அது சால்பு தருமன்றோ?
பௌ

☆ செய்யவேண்டிய கடமை சேய்மையில் இல்லை, அணித்தே உளது. க

☆ செய்ய வேண்டிய கடமை அண்மையில் இருக்க மக்கள் சேய்மையிலேயே தேடுகின்றனர். கி

☆ எல்லோரிடமும் நட்புக்கொள்க, அதுவே உன் இயல்பு. அவரை அறநெறியில் நிற்கச் செய்க, அதுவே உன் அறிவு. அவரை உன்னைப் போலவே கருதுக, அதுவே உன் மதம்..அவ்ரால் இன்பம் அடைவாய், அதுவே உன் ஆன்மா. ஜா

☆ கடவுளை அஞ்சி அவர் கட்டளைகளை நிறைவேற்று வாய், இதில் மனிதனுடைய கடமை முழுவதும் அடங்கும். எ

☆ இம்மையில் கடமை செய்வோர் மறுமையில் கதி அடைவார். எ

## கடவுள்

☆ கடவுள் எத்தனை பேர்? ஒருவரே, அவரை அறிவேன், அவரே ஆன்மாவின் மூலமாவர். -உபநிடதம்

☆ என்னைவிட உயர்ந்ததொன்றுமில்லை. முத்துக்கள் நூலில் கோத்துள்ளதுபோல் பிரபஞ்சம் முழுவதும் என்னிடமே யுளது. -பகவத்கீதை

☆ எல்லாப் பொருள்களிலும் ஒரு பொருள் உளது, அதுவே ஒருருவைப் பலவாக உண்டாக்குகின்றது. அப்பொருளைத் தங்கள் அகத்தே ,காண்பவரே அழி யாத இன்பத்தை பெறுவர். -உபநிடதம்

☆ வஞ்சகமின்றி நியாயமாய் நடந்தால், எந்தக் கடவுளுக் குப் பிரார்த்தனை செய்ய வேண்டும்? க

☆ நான் யார்? அன்பே யாவேன், உண்மையே என் உடல். பௌ

☆ உள்ளத்தைத் தூயதாக வைத்துக் கொண்டால் அதுவே கடவுள். பெள

☆ ஏதேனும் ஒரு கடவுளை ஏத்தினாலும் எல்லாக் கடவுளரும் ஏற்றுக் கொள்வர். பெள

☆ கடவுளைச் சிறிய இலையிலும் பசிய புல்லிலுங் கூடக் காணலாம். பெள

☆ எல்லோரும் என் ஆற்றலை அறிவர். ஆனால் என் ஆற்றல் நான் அடியாரிடமிருந்து பெற்றதே. பெள

☆ இதயமே கடவுள் கோவில், அதனால் இதயத்தைப் பாழ் செய்யாதே. பெள

☆ கண்ணுக்குப் புலப்படாத கடவுளை உள்ளத்தில் உண்மையுடைய பெரியோரிடம் காணலாம். பெள

☆ கடவுளை நாம் காணமுடியாது, ஆனால் நம் செயல் நல்லதா, தீயதா என்பதைக் கடவுள் காண்பார். பெள

☆ சிறந்த போதகர் இருதயம், சிறந்த ஆசிரியர் காலம், சிறந்த நூல் உலகம், சிறந்த நண்பர் கடவுள். எ

☆ கடவுளே நான் சொர்க்கம் புகுந்தால் அங்கு நீ உள்ளாய், நான் நரகம் புகுந்தால் நீ அங்கும் உள்ளாய். எ

☆ உன்னிடம் கடவுள் கேட்பது யாது! நீதியாக நடத்தல், கருணை காட்டுதல், அறத்துடன் ஒழுகுதல் - இம் மூன்றுமே. எ

☆ மனிதன் இன்பம் உண்டாகும்போது கடவுளைப் போற்றுவதுபோலவே துன்பம் உண்டாகும் போதும் போற்றக் கடவன். எ

☆ மக்கள் முன் நாண வேண்டாதவன் கடவுள் முன் அஞ்ச வேண்டியதில்லை. எ

☆ செல்வன் கடவுளைத் தன் பணப்பையில் வைத்திருக் கிறான். ஏழை தன் மனத்தில் வைத்திருக்கிறான். எ

☆ கடவுளை நோக்கி ஒரு முழ தூரம் நடந்தால் அவர் நம்மை நோக்கி இரண்டு முழ தூரம் ஓடி வருவார். எ

☆ மக்கள் கடவுள் பெயரால் மறச் செயல்கள் புரி கின்றனர். எ

☆ இரவலர் உன் வாசலில் நிற்கும்போது இறைவர் அவர் அருகில் நிற்பார். எ

☆ கடவுள் அருளைத் தேடுபவனுக்கே கடவுள் அருள் கிடைக்கும். எ

☆ இறைவன் விரும்புவது இருதயத்தையே. எ

☆ எவரும் கடவுளை எந்தக் காலத்திலும் கண்டதில்லை, அன்பு செய்பவரிடம் அவர் வசிக்கின்றார். கி

☆ கடவுளை நேசிப்பதாகக் கூறிக்கொண்டு சகோதரனை துவேசிப்பவன் பொய்யன், கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிக்கவே செய்வான். கி

☆ கடவுளிலேயே நாம் வாழ்கிறோம்; அவரே நம் உயிர் அவருடைய குழந்தைகள் நாம். கி

☆ கடவுள் அன்பாக உள்ளார். அன்புடன் வாழ்பவன் கடவுளிடம் வாழ்பவன். கடவுள் அவனிடம் வாழ் வார். கி

☆ அன்பு செய்யாதவன் கடவுளை அறியான். அன்பே கடவுள் ஆதலின். கி

☆ மனிதன் உணவினால் மட்டுமே வாழ்பவனல்லன். அவனுக்கு வாழ்வு தருவது கடவுள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லுமாகும். கி

☆ உண்டாலும், பருகினாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் இறைவனுக்குப் புகழுண்டாகுமாறு செய்க. கி

☆ நான் படைத்த மண்ணும் விண்ணும் என்னைக் கொள்ள முடியா. ஆனால் என்னிடம் பக்தியுள்ள என் அடிமையின் இருதயம் என்னைக் கொண்டு விடும். இ

☆ கிழக்கும் மேற்கும் கடவுளுடையனவே, எங்கு திரும்பினும் இறைவன் திருமுகம் காண்பாய். இ

☆ உன்னுடைய கடவுள் ஒருவரே, இரக்கமும் கருணையும் உடைய அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை. இ

☆ கடவுள் தம்மை நம்புகிறவர்களைக் காப்பவர். அவர்களை இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்வர். இ

☆ கடவுள் இல்லாத இடம் கிடையாது. அதனால் அவர் அனைத்தையும் அறிவார். இ

☆ என்னை நோக்கி ஒருச்சாண் வருபவரை நோக்கி நான் ஒரு முழம் போவேன். என்னை நோக்கி நடந்து வருபவரை நோக்கி நான் ஓடிச் செல்வேன். உலகம் அத்தனைப் பாவத்துடன் வந்தாலும் அதற்கேற்ற அளவு மன்னிப்பு அளிப்பேன். இ

☆ கடவுள் நடுவு நிலைமையுள்ளவரிடமே அன்பு செய்கின்றார். இ

☆ கடவுள் ஒவ்வொருவரையும் அவருடைய ஆற்றலுக்குத் தக்கவாறே சோதனை செய்வார். இ

☆ கடவுள் உன் குலத்தையும் சாதியையும் கேட்க மாட்டார். உலகத்தில் யாது செய்தாய் என்று மட்டுமே கேட்பார். இ

☆ என்னை அழைத்தால் ஏன் என்று கேட்பேன். என் சொற் கேட்டால் அறநெறி காட்டுவேன். இ

☆ இதயத்தைத் தூய்மை செய்து கொண்டால் என்னைக் காண்பாய், என்னைக் கண்டால் இன்பம் பெறுவாய் என்று இறைவன் அருள்கின்றான். பௌ

☆ கடவுள், பதவி இரண்டிலொன்றை மட்டும் தேடுக, இரண்டு தோணிகளில் காலை வையாதே. பௌ

☆ வண்டு தாமரை இல்லாமல் வாழாது, அதுபோல் நான் கடவுளின்றி வாழ முடியாது. பௌ

☆ கடவுள் ஒருவருடைய சாதி யாது என்று கேட்க மாட்டார், அவன் செய்தது யாது என்றே கேட்பார். பௌ

☆ கடவுளை மறந்தவன் உயிருள்ளபோதே இறந்தவன. பௌ

☆ கடவுளை இதயத்தில் கொண்டவர்களே அறிவும பொருளும் பெறுவர். பௌ

☆ விறகில் நெருப்புப்போலவும், பாலில் வெண்ணெய் போலவும் கடவுள்ஒலி சகல பொருள்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. பௌ

## கடவுள் அருள்

☆ ஓ அஹுரா! நற்சிந்தை, நற்செயல் வாயிலாக உமக்கு உற்ற நண்பனாக உள்ளவனுக்கு உண்மையைக் காட்டுகின்றீர், தூய சிந்தையால் உண்டாகும் ஆற்றலை அளிக்கின்றீர். ஜா

## கடவுள் இராச்சியம்

☆ கடவுள் இராச்சியம் என்பது உண்பதும் பருகுவது மன்று, அறநெறி நின்று அமைதியும் இன்பமும் பெறுவதாகும். கி

## கடவுள் உறைவிடம்

☆ உன் இதயத்துள் நோக்குக, கடவுள் உறைவிடம் அதுவே. இ

☆ தன்னை அறிபவனே கடவுளை அறிவான்.

☆ கடவுள் நாமத்தை பூசிப்பவர் கடவுளை அடையும் வாயில்கள் நான்கு; நல்லோரிணக்கம், உண்மை, திருப்தி, புலனடக்கம், இல்லறம் துறவறம் எதில்

இருந்தாலும் இந்த வாயில் எதுவழிபோனாலும் இறைவனைக் கண்டு விடலாம்.

☆ உடம்பு கொண்ட கடமைகளை எல்லாம் செய். ஆனால் உன் உள்ளம் மட்டும் கடவுளிடம் வைப்பாய்.

☆ உலகத்தை நேசிப்பதை விட்டவரே கடவுளுக்குப் பணி செய்ய முடியும்.

☆ ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்டவனைத் தேடுகின்றனர். தங்கள் இதயத்திலேயே அவனைத் தரிசிக்கின்றனர்.

☆ கடவுளைத் தியானிப்பவர் விடுதலை பெறுவர். அவருக்கு எம பாசம் கிடையாது.

☆ கடவுளை அடைவதற்குரிய வழிகள் பலவல்ல, ஒன்றே அது அன்பே.

☆ கடவுள் வழியிலன்றித் தன் வழியிலேயே நடப்பவர் யாரும் கடவுளைக் கண்டதில்லை.

☆ கடவுள் இதயத்தில் இருக்கும்போது காட்டில் போய் தேடுவது ஏன்?

☆ வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணர் உள்ளந்
தோறும்
சென்றுளே அமுத மூற்றும் திருவருள் போற்றி.
-பரஞ்சோதி முனிவர்

☆ இன்பம்பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. -மாணிக்கவாசகர்

☆ தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன். -திருநாவுக்கரசர்

☆ ஆவ லன்புடை யார்தம் மனத்தன்றி
மேவ லன், விரை சூழ்துவ ராபதிக்
காவ லன், கன்று மேய்த்து விளையாடும்
கோவ லன்வரில் கூடிடு கூடலே. -ஆண்டாள்

☆ நன்றி ருந்து யோக நீதி நண்ணு வார்கள் சிந்தையுட்
சென்றி ருந்து தீவி னைகள் தீர்த்த தேவ தேவனே!
குன்றி ருந்து மாட நீடு பாட் கத்து முரகத்தும்
நின்றி ருந்து வெஃக ணைக்கிடந்த தென்ன நீர்மையே?
-திருமழிசைப்பிரான்

☆ இறையாய் நிலனாகி எண்டிசையுந் தானாய்
மறையாய் மறைப் பொருளாய் வானாய்பிறைவாய்ந்த
வெள்ளத் தருவி விளங் கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தின் உள்ளே உளன். -பேயாழ்வார்

☆ சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச்
சுருதியிலும்
அல்லினு மாசற்ற ஆகாயந் தன்னிலு மாய்ந்து
விட்டோர்
இல்லிலு மன்ப ரிடத்திலு மீச னிருக்கு மிடங்
கல்லினுஞ் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே
-பட்டினத்தார்

☆ எங்கே கருணை இயற்கையி லுள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே
யாரே யென்னினு மிரங்குகின் றார்க்குச்
சீரே யளிக்குஞ் சிதம்பர சிவமே. இராமலிங்கர்

☆ பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கே ஒத்த தேவர் பிரான்
செய்யா னுங்கரிய நிறத்தானும் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான் கழிப்பாலையாதே. தே

☆ மெய்யனை மெய்யின் நின்றுணர்வானை
மெய்யிலாதவர் தங்களுக் கெல்லாம்
பொய்யனைப் புரம் மூன் றெரித்தானைப்
புனிதனைப் புலித் தோலுடை யானைச்
செய்யனை வெளிய திருநீற்றில் திகழும்
மேனியன் மான்மறி யேந்தும்
மைகொள் கண்டனை வாழ்கொளிர் புத்தூர்
மாணிக்கத்தை மறந்தேன் நினைக்கேனே.

-சுந்தரர்

☆ கடவுள் நாமத்தை இதயத்தில் சேமித்துவை, அச் செல்வத்தைத் திருடர் அணுகார், நெருப்பு எரிக்காது, காற்று அசைக்காது. பௌ

☆ இதயத்தின் உள்ளே ஓடு, ஆம் இதயத்தின் இதயத்தில், அங்குதான் அவன் உளன். பௌ

☆ அனைத்திலும் ஒன்றையே காண்க. இரண்டாவதை எண்ணுவதே உன்னை ஏமாற்றுவதாகும். பௌ

☆ எவர் இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவிக்கிறார் களோ அவரே இறைவனைக் காண்பவர். பௌ

☆ கடவுள் எப்போதும் அறவோர் இதயத்தில் உறைகின்றான். பௌ

☆ அறிவுள்ள யிடத்தில் அறமுண்டு, பொய்யுள்ள யிடத்தில் பாவமுண்டு, ஆசையுள்ளயிடத்தில் மரண முண்டு, மன்னித்தல் உள்ள யிடத்தில் கடவுள் இருக் கிறார். பௌ

☆ கடவுளின் திருக்கோயிலை மாசுபடுத்துபவன் அழிக் கப்படுவான். கடவுளின் கோயில் புனிதமானது. நீயே கடவுளின் கோயில். கி

☆ என் பெயரால் இரண்டு மூன்றுபேர் கூடியுள்ள இடத்தில் நான் அவர்கள் மத்தியில் இருப்பேன். கி

☆ இதோ பாருங்கள், இறைவனுடைய இராச்சியம் உள்ள யிடம் உன்னுடைய இதயத்திலேயே. கி

☆ நீ கடவுளின் கோயில் என்று அறியாயா? கடவுள் ஆவி உன்னிடம் தங்குவதை அறியாயா? கி

## கடவுள் கற்பனைகள்

☆ நான் உன் கடவுள். உனக்கு வேறு கடவுளர் கிடையார். என் பெயரால் தீமை செய்யாதே. வாரத்தில் ஒருநாள் ஓய்வுக் கொள். பெற்றோரைப் பேணு. கொல் லாதே. விபசாரம் செய்யாதே. திருடாதே. பொய்ச் சான்று புகலாதே. பிறர் பொருளை வெஃகாதே. கி

## கடவுள் காணல்

☆ நின்குணம் எதிர்கொண்டோர், அறங்கொண்டோர்
அல்லதை
மன்குணம் உடையோர், மாதவர் வணங்கியோர்
அல்லதை
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும்
சேரா அறத்துச் சீரிலோரும்
அழிதவப் படிவத் தயரியோரும்
மறுபிறப் பில்லெனும் மடவோரும் சேரார்
நின்னிழல், அன்னோர் அல்லது இன்னோர் சேர்வர்.

- கடுவனிள வெயினனார்

☆ புன்பு லவ ழிய டைத்த ரக்கி லச்சி னைசெய்து
நன்பு லவ ழிதி றந்து ஞான நற்சு டர்கொளீஇ
என்பி லெள்கி நெஞ்சுருகி உள்க னிந்தெழுந்ததோர்
அன்பி லன்றி யாழி யானை யாவர் க ணவல்லரே?

- திருமழிசைப் பிரான்

☆ பொறுத்தேன் புன்சொல்நெஞ் சிற்பொரு ளின்பமென
இரண்டும்
இறுத்தேன் ஐம்புலன் கட்கிட னாயின வாயிலொட்டி

அறுத்தேன் ஆர்வச்செற் றம்மயை தம்மை மனத்
தகற்றி
வெறுத்தேன் நின்னடைந்தேன் திரு விண்ணகர்
மேயவனே.
- திருமங்கையாழ்வார்

☆ பொய் வண்ண மனத்தகற்றிப் புலனைந்தும் செல
வைத்து
மெய்வண்ண நினைத்தவர்க்கு மெய்ந்நின்ற
வித்தகனை
மைவண்ணம் கருமுகில்போல் திகழ்வண்ண மரத
கத்தின்
அவ்வண்ண வண்ணனை யான் கண்டதுதென்
னரங்கத்தே.
-தொண்டரடிப்பொடியாழ்வார்

☆ அறிவென்னுந் தாள்கொளுவி ஐம்புலனுந் தம்மிற்
செறிவென்னுந் திண்கதவஞ் செம்மி-மறையென்னும்
நன்கோதி நன்குணர்வார் காண்பரே - நாடோறும்
பைங்கோத வண்ணன் படி. - பேயாழ்வார்

☆ எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போ
லெண்ணியுள்ளே
ஒத்துரிமையுடைய வராயு வக்கின்றார்
யாவரவருளந்தான் சுத்த
சித்துருவா யெம் பெருமானடம் புரியு மிடமென
நான் தெரிந்தேனந்த
வித்தகர் தமடிக் கேவல் புரிந்திடவென் சிந்தை
மிக விழைந்ததாலோ.
-இராமலிங்கசுவாமிகள்

☆ என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்த வொண்ணாதே.
திருமூலர்

ஆவம் உடையவர் காண்பர் அரன் தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்கு புக்காரே. திருமூலர்

நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற்
கனைகழல் ஈசனைக் காண அரிதாம்
கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்றவல்லாரே. திருமூலர்

கண்டேன் கமழ்தரு கொன்றையினான்அடி
கண்டேன் கரியுரி யான்தன் கழலினை
கண்டேன் கமல மலர் உறைவானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே. - திருமூலர்

☆ இடம்பாடு ஞானத் தீயால
எரிகொள் இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே. -திருநாவுக்கரசர்

☆ எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ அன்றோ பராபரமே.
-தாயுமானவர்

☆ எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும்
ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை
மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பர்
கருத்தில் வையார்
பட்டப் பகலை இரவென்று கூறிடும் பாதகரே.
-பட்டினத்தார்

## கடவுள் வணக்கம்

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா

அலகிலா விளையாட்டுடையார் எவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே. - கம்பர்

பொருளாகக் கண்ட பொருள் எவைக்கும்
முதற் பொருளாகிப் போதமாகித்
தெருளாகிக் கருமும் அன்பர் மிடி தீரப்
பருகவந்த செழுந்தேனாகி
அருளானோர்க்கு அகம்புறம் என்ற உன்னத
பூரண ஆனந்தமாகி
இருள்தீர விளங்கு பொருள்யாது அந்தப்
பொருளினையே இறைஞ்சி நிற்பாம்.

- தாயுமானவர்

☆ பூதபெள திகங்க ளாய
புவனகோ சரங்கட்கெல்லாம்
ஆதியாய் முதுமூலத்துக்கு
அநாதியாய் அகண்டா கார
சோதியாய் விளங்கி நிற்கும்
தூயசை தந்ய வாழ்வைக்
காதலாய்ப் பரவி நாளும்
கருத்தினுள் இருத்தி வாழ்வாம் கி

☆ திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தவம் புரிந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே. இ

☆ ஆண்டவனே, நீர் ஒருவரே, நீரே பற் பலவாய்த் தோன்றுகிறீர்.

☆ எனக்குக் கடவுளைப் போன்ற நண்பரிலர். எனக்கு நீரே உடலையும் ஆன்மாவையும் அருளினீர், அறிவைத் தந்தீர், அனைவரையும் காப்பவர் நீரே.

☆ கருணையங்கடலே! என்றும் என் இதயத்துள் உறைவாய். அதைக்கொண்டு நான் உன்னிடம் அன்பு கொள்வேன். கி

## கடவுள் தரிசனம்

☆ கடவுளிடம் பக்தி செய்ய வேண்டும் என்று ஆசைகொள், அந்த பக்தியை அன்பிருந்தால் பெறமுடியும், அறிவாலும் ஆராய்ச்சியாலும் பெற முடியாது.

☆ மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக்
குழலோசை
வையந்தன் 'னையும்நிறைந்து வானம்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில்
நடம்புரியும்
ஐயன்தன் திருச்செவியின் அருகணையப்
பெருகியதால். -சேக்கிழார்

☆ உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறகடபாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை என்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைத்துவரு வினைகள் தீர்ப்பாம்.
-பரஞ்சோதி முனிவர்

☆ நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்
விரைகின்றேன்

ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்முடையானே.

உற்றாரையான் வேண்டேன்
ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.

☆ சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் உரை - மாய்த்துக்
கோதிலமு தானனைக் குலாவுதில்லைக் கண்டேனே.
-மாணிக்கவாசகர்

☆ நினைவதும் வாய்மை மொழிவதும் அல்லால்
கனைகழல் ஈசனைக் காண அரிதாம். -திருமூலர்

☆ தன்னை யறிந்து அருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே.
-தாயுமானவர்

☆ கடவுளை - உன் ஆண்டவனை உன் இதயம் முழு வதையும் கொண்டு தேடினால் அவனை நிச்சயம் காண்பாய். எ

## கடவுள் நம்பிக்கை

☆ கடவுளிடம் உண்டாகும் நம்பிக்கை கடவுளிடம் அச்சம் உண்டாக்குவதாக இல்லாமல் அன்பு உண் டாக்குவதாக இருக்கவேண்டும். க

## கடவுள நாமம்

☆ கடவுள் நாமமே அச்சக் கடலைக் கடக்கும் தோணி, இருளை யோட்டும் சூரியன், துன்பத்தை மறக்கச் செய்யும் நகை.

☆ கடவுள் நாமமே மனிதருடைய நோய்கள் அனைத்துக் குமான அமிர்த சஞ்சீவியாகும்.

☆ கடவுள் நாமத்தைக் கேட்டால் உண்மை, திருப்தி, அறிவு மூன்றும் உள்ளத்தில் உதயமாகும். இ

## கடவுள் துதி

☆ ஆண்டவனே! அஹுரா மஜ்தா! நீர் எனக்கு அருளிய வண்ணம் நான் நன்மை உண்டாகுமாறு எண்ணிய எண்ணங்களுடனும், சொன்ன சொற்களுடனும், செய்த செயல்களுடனும் உம்மிடம் வருவேன். ஜா

☆ ஆண்டவனே! அஹுரா மஜ்தா! ஆற்றலும் அருளும் நிறைந்தவரே, எங்களுக்கு உதவி செய்ய அறவோரை அனுப்பும், எங்களுக்குத் தீமை செய்யாதிருக்குமாறு மறவோரைத் தடுத்தருளும். ஜா

☆ ஒ அஹுரா! அறிந்தவன் செய்யும் கடமை இது. அதை நான் செய்வேன். தூய மனதே தலையாய பேறு, உண்மை நெறியில் நிற்பவரே அதைப் பெறுவார். எல்லோர்க்கும் இந்த உண்மையைக் கூறுவதே எனக்கு இன்பமாகும். ஜா

☆ ஒ' அஹுரா! நான் உம்மை ஆதி அந்தமாக, அனைத்திலும் சிறந்ததாக, நற்சிந்தையின் தந்தையாக, உண்மையை உண்டாக்கியவராக, இதயத்தைச் சோதிப்பவராக என்று கருதினேனோ அன்றே உம்முடைய உண்மையை உணர்ந்தேன். என்னுடைய இதயத்தை உம்முடைய கோயிலாக ஆக்கினேன். ஜா

## கடவுள் வழிபாடு

☆ கடவுள் ஆவியாக இருக்கிறார். கடவுளை வழிபடு வோர் ஆன்மா மூலம், உண்மை மூலமே வழிபடக் கடவர். கி

☆ கடவுளை வழிபட்டு அவர் கட்டளைப்படி நடப்பவர் குறைகளைக் கேட்டு கடவுள் அருள் செய்வர். கி

☆ கடவுள் வழிபாட்டுக்கு, கழிவிரக்கம் கொண்டதற்கு அறிகுறியானவற்றைக் கொண்டு வா. கி

☆ கசந்து பாவத்தை உணர்ந்து சொரி
கண்ணீர் திருமஞ்சன மாட்டி
இசைந்த செபமாலிகை சூட்டி
இதயபீடத்தில் இருத்தி
அசைந்திடா மெய்விசுவாச
அன்பின் கிரியை நிவேதித்து
பசைந்த மனமோடு ஏசுதிருப்
பாதம் பூசியுமின் செகத்தீரே. - கிருஷ்ண பிள்ளை

## கருணை

☆ கடவுள் ஒருவனைக் காக்க விரும்பினால் அவனிடம் கருணையைப் பிறக்கச் செய்வார். தா

## கல்வி

☆ சிந்தனையுடன் சேராத கல்வி பயன்தராது. கல்வி இல்லாத சிந்தனை அபாயமானது. க

☆ நூற் கல்வி ஆசையை நாடோறும் பெருகச் செய்யும். அறநெறிப் பயிற்சி ஆசையை நாடோறும் குறுகச் செய்யும். ஆசை அற்றல், ஆற்ற முடியாதது யாதும் கிடையாது. தா

☆ கல்வியை நாடோறும் பெருக்காதவன் நாடோறும் சுருக்குபவனே யாவான். எ

## கவலை

☆ அறிவுடையோர்க்கு ஐயமில்லை, அறமுடை யோர்க்கு கவலையில்லை, துணிவுடையோர்க்கு அச்ச மில்லை.
க

☆ கவலைக்கு இடந்தருமளவு மனிதப் பண்பினின்றும் விலகுகின்றோம். சி

## கழிவிரக்கம்

☆ தான் தீமை செய்துவிட்டதை உணர்ந்து அதற்காகக் கழிவிரக்கம் கொள்பவன் அதன் பின்னர் அதைச் செய்யமாட்டான். பௌ

☆ அறங்களுள் எல்லாம் அழகு மிக்கது கழிவிரக்கம் என்ப தாகும். தா

☆ மரணத்துக்குத் தவிர மற்றைய எல்லாவற்றுக்கும் மருந் துண்டு. மறம் தவிர மற்றவை எல்லாம் நலம் பெறும் என்று நம்ப இடமுண்டு. அறம் தவிர மற்றவை எல் லாம் அழியும். கோபத்தைத் தவிர மற்றவை எல்லா வற்றையும் வென்று விடலாம். ஜா

☆ வாலறிவனிடம் செய்த பாவங்களைச் சொல்லி இனிச் செய்வதில்லை என்று உறுதி செய்து கொள்பவனிட மிருந்து அவனுடைய பாவங்கள் அகன்று போகும்.
ஜா

☆ தவறு செய்யாத தொண்ணூற்று ஒன்பது பேர்க்காக மகிழ்வதினும், தவறு செய்து கழிவிரக்கம் கொள்ளும் ஒருவனுக்காகவே தேவலோகத்தார் அதிகமாக மகிழ் வர்.

☆ கழிவிரக்கம் கொண்டாலன்றி அழியவே செய்வாய்.

☆ கழிவிரக்கம் கொண்டு மனமாற்றம் அடைவாய், உன் பாவங்கள் மறைந்து போகும்.

## கிறிஸ்து

☆ அன்பு மயமே கருணை ஆனந்த வாரியே,
அருள்மொழி மழைக் கொண்டலே
ஆருயிர்க் குயிரான அமிர்த சஞ்சீவியே,
அடியர் இதயாம் பரத்தில்
இன்புற உதித்திலகு மெஞ்ஞான பானுவே,
ஏத்தரும் சுகுண நிதியே,
இதரசம யாதீத நிலையமே, வானிழிந்து
இம்பர் வரு சீவ நதியே,
மன்பதை புரக்க நடு நின்றோங்கு ரட்சணிய
மாமேருவே, என்றுநின்
வன்புகழ் வழுத்திமெய் அன்பினொடு சிந்தைபர
வசமாகி ஆவி அனல்கொண்டு
என்புருகி ஆனந்த பாஷ்பஞ் சொரிந்து நின்று
ஏத்தவருள் செய்வ தென்றோ?
ஏகநாயக சருவ லோக நாயக கிறிஸ்து
இயேசு நாயக ஸ்வாமியே. - கிருஷ்ணப்பிள்ளை

## குரு

☆ உண்மையான குரு அன்பு செய்யக் கற்றுக்கொடுத்து உத்தமனைச் சந்திக்குமாறு செய்கின்றார்.

☆ குரு உடையவன் கடவுளைக் காண்பான். அறுபத்தெட்டுத் தீர்த்தங்களிலும் ஆடியவனாவான். துன்பங்கள் எல்லாம் இன்பங்களாக ஆகும். குரு இல்லாதவனுக்கு சாந்தியில்லை.

☆ குருவுக்குச் சேவை செய்பவன் அறநெறியைக் காண்பான். குருவின் துணையின்றி அதைக் காண முடியாது.
சீ

## கொல்லாமை

☆ அறவினை யாதெனில் கொல்லாமை, கோறல்
பிறவினை எல்லாம் தரும் திருவள்ளுவர்

☆ தன்னுயிர் நீர்ப்பினும்செய்யற்க, தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை திருவள்ளுவர்

☆ ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும், கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. - வள்ளுவர்

## கோபம்

☆ பிறர் தீமை செய்யினும் அவர்க்கு நன்மையே செய்க, உன்னுடைய இதயத்தைக் கோபத்தால் மூடாதே. இ

☆ அல்லாவை நம்புபவருடைய கோபம், அவருடைய தலைப்பாகையை ஒழுங்கு செய்யும் நேரம் வரையே நிற்கும். இ

## கோயில்

☆ உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பாலயம்,
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்,
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்,
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. -திருமூலர்

☆ பக்தியை அடிநிலையாகக் கொண்ட கோயில் உளது. அங்கு நின்று கடவுளை வணங்கு, மனத்தைத் தூய்மை செய்ய விரும்புபவர் அங்கே உள்ளனர். கடவுள் தூய வரையே விரும்புகிறார். இ

## சகோதரர்

☆ உலகிலுள்ள மக்கள் அனைவரும் உடன்பிறந்தவரே அங்ஙனமிருக்க, யாரும் உடன் பிறந்தாரிலர் என்று வருந்துவதேன்? க

## சடங்குகள்

☆ உள்ளத்தில் மாசு வைத்துக் கொண்டு உடலைக் கழுவுகிறவன், இம்மையிலும் மறுமையிலும் இன்பம் காண மாட்டான். கி

## சாத்தான்

☆ கடவுளுக்குப் பணிந்து சாத்தானை எதிர்த்தால் அவன் உன்னைவிட்டு ஓடிவிடுவான். கி

## சாதனம்

☆ சாதனம் தீயதாயின் பயன் நல்லதாயினும் தீயதே. எ

## சாந்தி

☆ பகவான் கூறுகிறார்; என்னிடத்தில் இடைவிடாது பக்தியுடையவனாய், இதயத்தை அடக்கி ஆள்பவன் சாந்தி பெறுவான்.

☆ மனத்தை அடக்காதவன் பக்தன் ஆகமுடியாது. தன்னை ஆண்டுகொள்பவனே ஆளமுடியும்

-பகவத்கீதை

☆ ஆரா வியற்கை அவாநீப்பின், அந்நிலையே
பேரா இயற்கை தரும். திருவள்ளுவர்

☆ அறிவின்றித் தியானமில்லை, தியானமின்றி அறிவில்லை. அறிவும் தியானமும் யாரிடமுண்டோ அவரே சாந்தி அடைவார். பௌ

## சால்பு

☆ மனம், மொழி, மெய் மூன்றையும் அடக்கி ஆண்டு எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புடையவனாய் அவாவையும் சினத்தையும் நீக்குகிறவனே சால்பு அடைவான். -மனு

☆ எல்லாப் பிராணிகளிடத்திலும் சமமாக நிலைத்து நின்று அவை அழியும்போது தான் அழியாமல் இருக்கும் பரம்பொருளை அறிபவனே சால்பு பெறுவான்.

-பகவத்கீதை

☆ தேவலோகத்திலுள்ள உன் தந்தை சால்புடையவராக இருப்பது போலவே நீயும் சால்புடையவனாக ஆக வேண்டும். கி

☆ சால்புடையவன் அருளுடையன், எந்த உயிர்க்கும் தீங்கு செய்யான், பொறையுடையன், உண்மையன், மாசற்ற மனத்தினன், எல்லோரையும் சமமாக எண்ணு பவன், எல்லோர்க்கும் உதவுபவன்.

-விஷ்ணு புராணம்

## சான்றோர்

☆ அறம் என்றும் இன்பம் என்றும் இரண்டு பொருள்கள் உள. சான்றோர் இன்பத்தை விட்டு அறத்தையே கொள்வர்.

☆ அறிவில்லாதவர் ஐம்புல இன்பத்தை நாடுவர், நாடி மரணத்தின் வலையில் வீழ்வர். அறிஞர் நிலையற்ற வற்றை நிலையின என்று கருதார். -உபநிடதம்

☆ அறிவில்லாதவர் பற்றுடன் தொழில் செய்வர்; அறி வுடையவர் பற்றை நீக்கி மக்கள் நலம் நாடித் தொழில் செய்வர். -பகவத்கீதை

☆ தான் அடையும் நலன்களைப் பிறர்க்கும் தந்து துய்ப்ப வனே அறிஞன். பௌ

☆ வானத்திலும் உயர்ந்தோர் இருவர்; எல்லையற்ற ஆற்றல் இருந்தும் எந்தத் தீமை செய்யவும் பயன் படுத்தாதவனும், பொருளில்லா திருப்பினும் பிறர்க்குக் கொடுப்பவனும் ஆவர். -மகாபாரதம்

☆ கொல்லா நலத்தது நோன்மை, பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

திருவள்ளுவர்

சால்பிற்குக் கட்டளை யாதெனில், தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். -வள்ளுவர்

☆ சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு உணர்த்தரிது எண்ணிய மூன்றனுள்
முற்குணத் தவரே முதலோ ராவர்
நற்குணக் கடல் ஆடுதல் நன்றரோ. -கம்பர்

☆ செற்றம் நீக்கிய மனத்தினர், யாவையும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமையர், காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர், மேவரத்
துனியில் காட்சி முனிவர். -நக்கீரர்

☆ பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா, அமர ரேறே,
ஆயர்தம் கொழுந்தே, யென்னும்
இச்சுவை தவிர, யான்போய்
இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.
- தொண்டரடிப் பொடியாழ்வார்

☆ தெளிதாக நன்குணர்வார் சிந்தை - எளிதாகத்
தெளிதாக உள்ளத்தைச் செந்நெறி ஞானத்
தாய்நாடு கன்றேபோல் தண்துழா யானடிக்கே
போய் நாடிக் கொள்ளும் புரிந்து.
-பொய்கையாழ்வார்

☆ கற்றாங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச் சென்றார். பௌ

☆ புல்லறிவு அகற்றி நல்லறிவு கொளீஇ
எம்மனோரையும் இடித்துவரை நிறுத்திச்

செம்மைசெய் தருளத் திருவுருக் கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே.
-குமரகுருபரர்

☆ பொருளுடை யோரைச் செயலினும், வீரரைப் போர்க் களத்துந்
தெருளுடை யோரை முகத்தினும், தேர்ந்து தெளிவது போல்
அருளுடை யோரைத் தவத்தில் குணத்தில் அருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தகுங் கச்சியேகம்பனே.
-பட்டினத்தார்

☆ எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கியு பகரிக்கின் றார் யாவரந்தச்
செவ்வியர் தஞ்செய லனைத்துந் திருவருளின் செயலெனவே தெரிந்தே னிங்கே
கவ்வையிலாத் திருநெறியத் திருவாளர் தமக்கேவல் களிப்பாற் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர் சீரோதிட வென்வாய் மிகவும் ஊர்வதாலோ.
-இராமலிங்க சுவாமிகள்

☆ உபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும் - உபகாரம்
தாம் செய்வ.தல்லால், தவத்தினால் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தாரக்கு இல். ச -நாலடியார்

☆ இல்லார்க்கு ஒன்று ஈயுமுடைமையும், இவ்வுலகின்
நில்லாமை கண்ட நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்
துன்புறுவ் செய்யாத தூய்மையும், இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க்கு உள. ச -திரிகடுகம்

☆ அடக்க முடையவன், பிறரை இகழாதவன், சினத்தைப் போற்றாதவன், செருக்கில்லாதவன், பிறரிடம் குற்றம் காணதவன், புறங்கூறாதவன் - இவனே சான்றோன். ச

☆ சான்றோர்க்குரிய பட்டம் சான்றோர் எனப்படுவதே. க

☆ சான்றோர் பிறரிடம் காணும் நற்குணத்தை வளர்க்கவே நாடுவர், தீய குணத்தை யன்று. க

☆ பெரியோர் என்போர் குழவி உள்ளத்தை இழந்து விடாதிருப்பவரே. க

☆ மனித குணம் அனைவர்க்கும் பொதுவானதே. அதன் சிறந்த பகுதிப்படி நடப்பவர் பெரியோர், தாழ்ந்த பகுதிப்படி நடப்பவர் சிறியோர். க

☆ தனக்கு ஆசிரியரைத் தேடிக் கொள்பவன் நலம் பெறுவான். ஆணவம் உடையான் அழிவான். கேள்வி கேட்பவன் அறிவு பெறுவான். க

☆ சான்றோர் போற்றுவன மூன்று பொருள்கள்: கடவுள் கட்டளை, பெரியோர், அறிஞர் அறிவுரைகள். க

☆ சான்றோர் தம் ஒழுக்கத்திலேயே கண்ணா இருப்பர், அல்லாதாரோ தம் பதவியிலேயே கண்ணாய் இருப்பர்.

☆ செல்வம் கிடைக்கும் சமயம் அதை விட்டு அறத்தை விரும்புவோர், அபாயம் வரும் சமயம் அஞ்சாமல் உயிர் துறக்க உறுதி செய்வோர், வாக்குக் கொடுத்து நீண்டகால மாயினும் மறக்கா திருப்போர் - இவரே சான்றோர் என்று எண்ணத் தக்கவர். க

☆ அறநெறியை அறியாதவன் சான்றோன் ஆக முடியாது. நல்லொழுக்கத்தை அறியாதவன் நலம் பெற முடியாது. சொற்களின் சக்தியை அறியாதவன் பிறர் குணத்தைத் தெரிய முடியாது. க

☆ சான்றோரிடம் காணப்படாதவை நான்கு: ஆராயாமல் வெறுத்தல், ஆதாரமின்றி முடிவு செய்தல், பிடிவாதம், ஆணவம். க

☆ சான்றோர் செய்யத்தக்க தலை சிறந்த பணி, அற நெறியில் நிற்குமாறு பிறர்க்கு உற்சாகம் ஊட்டுவதே. க

☆ சான்றோர் நட்புக் கொள்வார், நெருங்கிப் பழகார். அல்லாதவர் நெருங்கிப் பழகுவர், நட்புக் கொள்ளார். க

☆ சான்றோர் துன்பம் நேரினும் சோர்வுறார். நன்மை செய்யினும் புகழ் விரும்பார். தம்முடைய இதயத்தை மனித குலத்துக்குரியதாக்குவார். தங்களைப் பார்த்த மாத்திரத்தில் மக்கள் தந்தை தனயன்போல் நடப்பர். சான்றோர்க்குப் பகைவரில்லை. தா

☆ சான்றோர்க்குத் தாழ்ந்தவர் என்பவர் கிடையார். சகலரும் அவருடைய அன்புக்கு உரியவர். தா

☆ இதயத்தில் உண்மையுடையவர் இறைவனுடைய அடியார். எவர் அவர்க்குத் தீங்கு செய்ய இயலும்? தா

☆ உலக நலத்தை விரும்பார், வறுமைக்காக நாணார், உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்தால் ஊறு அடையார். தா

☆ சான்றோர் சென்றது கருதார், சேர்வது நினையார். தா

☆ எவர் நல்ல சொல் சொல்லுகிறரோ, எவர் நல்ல விடயத்தை எண்ணுகிறரோ எவர் நல்ல செயல் செய்கிறரோ அவரே சான்றோர், அவரே அருள் பெறுவார். தா

☆ சான்றோர் வாழ்வில் பற்று வையார், மரணத்தை வெறுக்கார், வாழ்வு என்று மகிழார்; மரணம் என்று வருந்தார், அறியாமலே வந்தார், அறியாமலே போவார். தா

☆ நல்லவன் தன்னை மறப்பான், தெய்வீக மனிதன் செயலற்றிருப்பான், சான்றோன் புகழை விரும்பான். தா

☆ சான்றோர் சாதாரண உடை தரிப்பர். ஆனால் இதயத்தில் மாணிக்கம் உடையவர். தா

☆ சான்றோர் பிறர் புகழ்வதைக் கேட்டு நெறி பிறழார், பிறர் இகழ்வதைக் கேட்டும் அயரார். தா

☆ தமக்கு நல்லது என்று கருதாததைப் பிறர்க்குச் செய்யாதிருப்பவரே அறவோர் ஆவர். ஜா

☆ சான்றோரிடம் சினம் தோன்றுமாயின் அவர் சால்பு அழிந்துபோகும். எ

☆ மனிதன் அடையும் முதல் சால்பு நல்ல எண்ணங்களை எண்ணுதல், இரண்டாவது சால்பு நல்ல சொற்களைச் சொல்லுதல், மூன்றாவது சால்பு நல்ல செயல்களைச் செய்தல். எ

☆ கடவுளை நம்பி அறநெறி நிற்பவர் அனைவரும் சான்றோராவர். எ

☆ அருமறை தெரிந்து நீதிநெறி முறைநடந்து
தீனிவ் அகில தலமெங்கு மீறவே
ஒருகவிகை கொண்டு மாறுபடுமவரை வென்று
நாலும் உறுபுகழ் சிறந்த வாழ்வுளோர்
திருவொளியெனும் ஹபீபுநபி முகம்மதன்று
வானோர் சிரமிசை நடந்து சோர்வுறா
இருசரண நம்பினோர்கள் வரிசைக ணிறைந்த
பேர்க ளெவரினும் உயர்ந்த பேர்களே.

- உமறுப்புலவர்

☆ சான்றோர் யார்? ஆண்டவனுக்கு அஞ்சி அறநெறியினின்று வழுவா திருப்பவரே. இ

☆ தோணியில் ஏறிக்கொள். வாழ்வாகிய கடல் ஆழமானது. கடக்கக் கடினமானது, சான்றோருடன் உறைவதே கரையேற்றும் தோணி.

பௌ

- ☆ சான்றோர் உறவு கிடைத்தால் பகைவரும் நண்பர் ஆகிவிடுவர்.
- ☆ சான்றோர்க்குச் சேவை செய்பவன் கடவுளாகவே ஆகி விடுகிறான்.

## சான்றோன்

- ☆ எவன் மனத்தூய்மை, அடக்கம், அறிவு உடைய வனோ, எவன் மனத்தில் செருக்கும் தீமையும் இல்லாத வனே, அவனே சான்றோன்.
- ☆ எவன் எல்லா உயிர்களிடத்திலும் அருள் உடைய வனோ, அவன் சான்றோன்.
- ☆ எவன் தான் தவறு செய்யாதிருந்தும் பிறர்பழிச் சொல்லைப் பொறுத்துக் கொள்கின்றானோ அவன் சான்றோன்.

## சிந்தனை

- ☆ நான் நாடோறும் என்னை மூன்று விஷயங்களில் ஆய் வேன்: பிறர்க்கு நன்மை தேடுவதாக எண்ணி என்க்கே நன்மை தேடுகின்றேனா? நண்பருடன் பழகும் போது பொய்யாக நடக்கின்றேனா? கற்றபடி நிற்கத் தவறி விடுகின்றேனா?

## சிறப்பு

- ☆ மனத்தின் சிறப்பு ஆழமுடைமை, ஈகையின் சிறப்பு அன்புடைமை, உரையின் சிறப்பு உண்மையுடைமை, ஆட்சியின் சிறப்பு அமைதியுடைமை.

## சினம்

- ☆ ஒரு கணநேரச் சினத்தை அடக்கிக்கொண்டால் வாழ் நாள் முழுவதும் கழிவிரக்கம் கொள்ளவேண்டி வராது.
- ☆ சென்றது குறித்துச் சினத்துக்கு இடங்கொடுத்து இதயத் தில் கசப்பு உண்டாக்கிக் கொள்ளாதே.

☆ கோபத்தை அடக்குபவன் கொற்றவனினும் ஆற்றல் மிகுந்தவன், தன்னை ஆள வல்லவன் தானையை வெல்பவனினும் ஆற்றல் மிகுந்தவன். இ

☆ இன் சொறகள் சினத்தைத் தணிக்கும்; கடுஞ்சொற்கள் சினத்தை எழுப்பும். இ

☆ சினம் கொள்ளத் தயங்குபவரே சிறந்த அறிவு பெற்றவர். இ

☆ அல்லாவை நம்புவருடைய கோபம், அவருடைய தலைப்பாகையை ஒழுங்கு செய்யும் நேரம் வரையே நிற்கும்.

## சுதந்திரம்

☆ சகோதரர்களே, கடவுள் உங்களுக்கு சுதந்திரம் அருளி யுள்ளார். அதை உலக சுகத்துக்காக உபயோகியாமல் பிறரிடம் அன்பு செய்வதற்கே உபயோகியுங்கள். கி

## சுயஉதவி

☆ ஆற்றல் உன்னுடையது, அனைத்தும் உன்னுடைய ஆதிக்கத்தில் உள்ளன. உனக்கு உதவி செய்யக் கூடியவன் நீயேதான்.

## சுயநலம்

☆ சுயநலத்தைத் தேடாதீர், ஒவ்வொருவரும் பிறர் நலத்தையே தேடக் கடவர். கி

☆ நன்மை செய்யச் சோர்வடையலாகாது, சோர்வடையா திருந்தால் தக்க காலத்தில் பயன் அடைவோம். கி

## செயல்

☆ கடினமாயுள்ளது அறிவதன்று, செய்வதே. தா

## செருக்கு

☆ செருக்கு உடையவன் பக்தி செய்ய முடியாது. இ

☆ இதயத்திலிருந்து செருக்கை நீக்கு, இறைவன் சன்னதி திறக்கும். இ

☆ கடவுளை அறிந்தவனே உயர்ந்தவன், ஆனால் அவன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளவே செய்வான். இ

☆ சாதிச் செருக்கை விட்டுவிடத் துணிபவனே ஞானி யாவான்.
பௌ

☆ அறிவில்லாதவனால் கூடப் பயன் உண்டு, அறிவிருந் தும் ஆணவம் உடையவனால் யாதொரு பயனும் உண்டாகாது. பௌ

## செல்வம்

☆ செல்வத்திடம் வைக்கும் ஆசையே தீமைகள் அனைத் திற்கும் வேர். கி

☆ கவனமாக நடந்துகொள். வெஃகுதலுக்கு இடங் கொடுத்துவிடாதே. வாழ்வு செல்வப் பொருள்களைத் தேடித் குவிப்பதில் அடங்கவில்லை. கி

☆ உடல், பொருள், ஆவி மூன்றையும் கடவுள் நெறி யைப் பரவச் செய்வதற்காகப் பயன்படுத்துக. இ

☆ செல்வமும் மக்களும் தெய்வத்தை மறக்கச் செய்து விடாதபடி காத்துக் கொள். இ

☆ கடவுளுடைய கருணையும் மன்னிப்பும் பிற செல்வங் கள் அனைத்தினும் சிறந்தவை. இ

☆ செல்வம் என்பது சேர்க்கும் பொருளன்று, தேவையற் றிருத்தலே. இ

☆ கடவுள் பக்திக்கு அடுத்தபடியில் முக்கியமான கடமை யாயிருப்பது அறவழியில் செல்வம் தேடுவதாகும். இ

☆ என்னிடம மூன்று சிறந்த செல்வங்கள் உள: முதலாவது அனபு, இரண்டாவது சிக்கனம், மூனறாவது அடககம். அன்புடையவன் அச்சமில்லாதவன். சிக்கனமுடையவன் வண்மையாக இருக்க முடியும். அடககமுடையவன் தலைவனாக ஆக முடியும். தா

☆ செல்வர் என்பவர் யார்? அறிவுடையவர், அச்சமிலலாதவர், திருப்தியுடையவர், சான்றோரின் புகழ் பெற்றவர், அறததொடு பொருள தேடுபவர், இவாகளே செலவர். ஜா

☆ ஆன்மாவை அடையாதவன் எதையும் அடையாதவனே. ஜா

☆ செலவம் எலலாம் அவன் தருவதே. அங்ஙனமிருக்க செல்வம் பெற்றதாகச் செருக்கு அடைவதேன்? பௌ

☆ உலகம் அனைத்தும் எனது, எனது என்று கூறிச் சாகின்றது ஆனால் உலகச் செலவம் ஒருவருடனும் போகப் போவதில்லை பௌ

☆ செலவததை நம்புபவா நதியிலுள்ள மணலைக கொண்டு கயிறு திரிப்பவராவர். பௌ

☆ பொன்னும் வெள்ளியும் தேடலாம், ஆனால அவை நம்மைச் சிக்க வைக்கும் பொறிகளே. பௌ

☆ உன்னுடைய செல்வம உன்னுடன் வராது, அங்ஙனமிருகக அதில ஆழ்வானேன்? பௌ

☆ செல்வத்தின் மிகுதியால சிறந்தவன் ஆகியவன் எவன்? பௌ

☆ உண்மையான செல்வத்தைப் பெறுபவர் உள்ளத்தில் இறைவனிடம் அன்புடையவரே. பௌ

## சொர்க்கம்

☆ சொர்க்கமும் நரகமும் உள்ள இடம் இதயமே. சி

## தந்தை

☆ நல்லொழுக்கத்தினும் மேலான பொருள் எதையும் தந்தை மகனுக்குத் தரமுடியாது. இ

## தவறு

☆ உண்மையான தவறு யாதெனில் தவறுகள் இருந்தும் அவற்றை நீக்க முயலா திருப்பதே. க

☆ தவறுகளைக் குற்றங்களாக எண்ணலாகாது. தா

☆ பிறர் தவறுகளை எடுத்துக் காட்டாதே, உன்னுடைய சிறப்புளகளைப் பற்றிப் பேசாதே. தா

## தவம்

☆ தீமை செய்யாமை, பொய்யாமை, நன்மை செய்தல், அருளுடைமை - இவற்றையே சான்றோர் தவச் செயல்கள் என்பர். உடலை வருத்தும் நோன்புகளை அன்று. -மகாபாரதம்

☆ உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தால் வரும்.

-வள்ளுவர்

☆ பொருளொடு போகம் புணர்தல் உறினும்
அருளுதல் சான்ற அருந்தவம் செய்ம்மின்
இருளில் கதிச் சென்று இனிஇவண் வாரீர்
தெருள லுறினும் தெருண்மின் அதுவே.

-வளையாபதி

☆ ஐவகைப் பொறியும் வாட்டி
ஆமையின் அடங்கி, ஐந்தின்
மெய்வகை தெரியும் சிந்தை
விளக்கு நின்றெரிய விட்டுப்

பொய் கொலை களவு காமம் அவா
இருள் புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக்
கனைகதிர்த் திங்கள் ஒப்பார். ச -சிந்தாமணி

☆ எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்நெஞ்சில்
கொள்ளிவைத் தால்போல் கொடிதெனினும் - மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்து அடக்க லாற்றின்
பிறிதொன்று வேண்டா தவம். ச -அறநெறிச்சாரம்

## தன்னலம்

☆ அறிவில்லாதவன், வாழ்வு நிலையாதது என்பதை மறந்து தன்னலத்தில் ஆழ்ந்து போவான். ச

☆ தன்னை வெல்வதே அறத்தின் வேர். சி

## தன்னலமின்மை

☆ பிறர்க்குத் தராமல் தாமே உண்பவர் பாவத்தையே உண்பவர். பௌ

☆ தன்னலத்தை மறந்து சகலத்தையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்பவனே, நீரானது தாமரையைத் தீண்டாததுபோல் பாவமானது தீண்டுவதில்லை.
-பகவத்கீதை

☆ தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். -வள்ளுவர்

☆ வயல்களைக் கெடுப்பவை களைகள், மக்களைக் கெடுப்பவை தன்னலச் செயல்கள். பௌ

☆ செல்வம் உடையவன் அதைத் தனித்து அனுபவித்தால் அதை இழந்தவனே. பௌ

☆ மக்களுக்குத் துன்பம் தருவது தன்னலமே, அவர்களை விட்டுக் கவலைகள் அகல்வதில்லை. பௌ

☆ தன்னல எண்ணங்களை மனத்துள் புகாதபடி தடுக்க முயல்வதே தன்னலமின்மை யாகும். தா

## தாவோ

☆ தாவோ என்பது நன்னெறி, அதைச் சிந்திப்போர் மனத்தில் அவா எழாது. அவாவின்மை அமைதி தரும்.

## தியானம்

☆ மௌனமாய்த் தியானித்தால் மனம் கலங்காநிலை பெறும். ச

☆ தியானத்தின் மூலம் சிந்தையைத் தூய்மை செய்பவன் துன்பக் கடலைக் கடக்கும் கப்பலாவான். ச

## திருப்தி

☆ நீ எத்தகையவனோ, உன்னிடம் யாதுளதோ இரண்டிலும் திருப்தியுற்றால் எவரும் உன்னைக் கெடுக்க முடியாது. தா

☆ திருப்தியும் அடக்கமும் குண்டலங்கள், சுயமரியாதை கமண்டலம், தியானம் திருநீறு, உடலே காசாயம், பக்தியே ஊன்றுகோல். செ

☆ எந்த நிலையிலிருப்பினும் திருப்தியாக இருக்கக் கற்றுக் கொண்டு விட்டேன். கி

## தீமை

☆ தீமையை உனக்கு உண்டான நோயாகக் கருதி அதற்குரிய சிகிச்சையைச் செய். அப்பொழுது மக்கள் அவ்வழியை விட்டு விடுவர். இ

## தீமை செய்தல்

☆ உன் சகோதரன் உனக்குத் தீமை செய்தால் அவனைக் கண்டிப்பாய். அவன் கழிவிரக்கம் கொண்டால்

அவனை மன்னித்துவிடு. ஏழு முறை தீமை செய்து ஏழு முறை கழிவிரக்கம் கொண்டாலும் மன்னித்து விடு. கி

☆ தீமையைக் கண்டு சோர்ந்து விடாதே. தீமையை நன்மையால் வென்றுவிடு. கி

☆ வாளை உறையிலிடு. வாளையெடுப்பவன் வாளா லேயே மடிவான். கி

☆ உழைக்காதவனுக்கு உண்ண உரிமை கிடையாது. கி

## தீமைக்கு நன்மை

☆ தீமை செய்வோரிடம் அன்பு செய்வோர் தம்முடைய நலத்தில் கருத்துடையோர். க

☆ நீ எவ்வளவு கோபித்தாலும் நான் உன் நலம், அதையேதான் நாடுவேன். க

☆ நன்மை செய்தாலும் தீயவன் திருந்தாவிடில் நன்மை செய்தது போதாது என்று நல்லோர் கருதுவர். க

## தீயொழுக்கம்

☆ தீயொழுக்கம் எது? நம்பிக்கையில்லாதிருத்தல், சினத்துக்கு இடந் தருதல், கவலையுறுதல், செருக்குக் கொள்ளுதல், பிறர் தீயொழுக்கம் கண்டு தீய சிந்தை உண்டாதல், உடல் நலமுள்ளபோது உரிய வேலை யைச் செய்யாதிருத்தல், அறநெறியில் நின்றும் உண்மை தவறுதல், நன்றி பெறும் செயல் நாடோறும் செய்யாதிருத்தல். கி

## துக்கம்

☆ இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக பாவிப்ப வனுக்குத் துக்கம் உண்டாகுமா? பௌ

## துறவு

☆ அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும் நன் றெந்தாய் பராபரமே.

தன்னை அறிந்தால் தலைவன் மேற்பற்றலது
பின்னை யொரு பற்றும் உண்டோ பேசாய்
பராபரமே.
-தாயுமானவர்

☆ அறந்தா னியற்று மவனிலுங் கோடி அதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திருவாதனையற்று
இறந்தான் பெருமையை என்சொல்லுவேன் கச்சி எகம்பனே.
-பட்டினத்தார்

☆ துறந்தேனார் வச்செற்றச் சுற்றம் துறந்தமையால்
சிறந்தேன் நின்னடிக் கேயடிமை - திருமாலே!
அறந்தா னாய்த்திரிவாய்! உன்னையென் மனத்தகத்தே
திறம்பா மற்கொண்டேன்தி ருவிண் ணகரானே!
-திருமங்கையாழ்வார்

☆ கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவுமென்று உரவோர் துறந்தன. பௌ

☆ துறவு பூண்டவன் தீமை செய்தால் நரகத்தினின்று தப்பான். இல்லறத்தான் நன்னெறியில் நின்றால் வீடு பெறுவான். ச

☆ துறக்கவேண்டியவை அழுக்காறு, அவா, வெகுளி மூன்றுமாகும். ச

☆ அழுக்காறு உடையவன் ஒருநாளும் நலம் அடையான். ச

## துன்பம்

☆ இன்பத்துள் இன்பம் விழையாதான், துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.
திருவள்ளுவர்

இன்பம் விழையான், இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். திருவள்ளுவர்

அவா இல்லார்க் கில்லாகும் துன்பம்அஃ துண்டேல்
தவா அது மேன்மேல் வரும்.
திருவள்ளுவர்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. திருவள்ளுவர்

☆ தீமையின் பயன் துன்பம், நன்மையின் பயன் இன்பம். பௌ

☆ எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்புகின்றன. அதை அறிந்தும் தன் இன்பத்துக்காகப் பிற உயிர் கட்குத் துன்பம் செய்பவன் இன்பம் காணமாட்டான். பௌ

☆ பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்,
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்;
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக. சாத்தனார்-பௌ

☆ பொய்யாற்று ஒழுக்கம் பொருளெனக் கொண்டோர்
கையாற்று அவலம் கடந்ததும் உண்டோ? பௌ

☆ துன்பம் தோற்றம், பற்றே காரணம்;
இன்பம் வீடே; பற்றிலி காரணம். பௌ-சாத்தனார்

☆ இன்சொல் விளைநிலனா, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருவட்டி
அன்பு நீராக அறப்பைங்கூழ் ஆக்குவார்க்கு
என்றும் இடும்பை இல். ச -அறநெறிச்சாரம்

☆ மெய்வகை தெரிதல் ஞானம்,
விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகை இன்றித் தேறல்
காட்சி, ஐம் பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயாது
ஒழுகுதல் ஒழுக்கம், மூன்றும்

இவ்வகை நிறைந்த போழ்தே
இருவினை கழியு மன்றே. ச -சிந்தாமணி

☆ பொய்யின் நீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்டு
ஐய மின்றி அறநெறி ஆற்றுமின்
வைகல் வேதனை வந்துறல் ஒன்றின்றிக்
கௌவை யில் உலகு எய்துதல் கண்டதே.

ச - வளையாபதி

☆ அறிவது அறிந்தடங்கி, அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகுவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது. ச -நாலடியார்

☆ அணிநிழல் அசோகமமர்ந்து அருள்நெறி நடாத்திய
அணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே. ச

☆ வைரம் பட்டை போட்டால்தான் ஒளிவிடும், மனிதன் துன்பத்தால் சோதிக்கப்பட்டால்தான் சால்பு பெறு வான். க

☆ செருக்கினும் பெரிய குற்றமில்லை; அதிருப்தியினும் பெரிய துன்பமில்லை, ஆசையினும் பெரிய பிழையில்லை. ஆதலால் திருப்தியே அழியாத இன்பம் தரும்.

☆ தன்னிடமிருந்து தன்னை அகற்றிக்கொள்ள வல்ல வனுக்கு எவனால் துன்பம் செய்ய முடியும்? தா

☆ சுயநலத்தில் இறங்கித் துன்பத்தைத் தேடிக் கொள் ளற்க. சீ

☆ எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால் துன்ப முமில்லை, கவலையுமில்லை. சீ

☆ அன்பு மயமாம் திருமேனி
அருளுக்கு உறையுள் திருநயனம்

இன்பம் தரும் மெய்ச் சஞ்சீவி
எழில்வாய் கனியும் திருவாக்கு
மண்பூவுலகுக்கு அஞ்சல் என
வழங்கும் அபய வரதாஸ்தம்
துன்பேன் உமக்குஇவ் வெம்பெருமான்
துணைதாள் தொழுமின் செகத்தீரே.

கி -கிருஷ்ணபிள்ளை

☆ அறநெறியில் நிற்பவருக்கு அச்சமுமில்லை, துன்பமுமில்லை. இ

☆ கடவுளை நம்பி அறநெறி நின்று பிறர்க்கு உண்மையையும் பொறுமையையும் எடுத்துக் கூறுபவர்க்குத் துன்பமில்லை. இ

☆ மனத்தில் அறிவும் தூய்மையும் உடையவனே வாழ்வின் குறிக்கோளை அடைவான். -உபநிடதம்

☆ எங்கும் நிறைந்துள்ள இறைவனை அறிவில்லாதவரே காணதவர். அவனைக் கண்ணால் காண இயலாது. தூய வாழ்வு உடையவரே அவனைக் காண்பர். -மகாபாரதம்

☆ இறைவனே, தூய இதயத்தில் எழுந்தருளும்; அப்போது உம்முடைய அருள் என்னுடைய இதயத்தைத் தூய்மை செய்துவிடும். -உபநிடதம்

☆ மனமானது சடங்குகளாலும் பரிகாரங்களாலும் தூய்மை அடைவதில்லை, அறிவோடு கூடிய பக்தியினாலேயே அடையும். -பாகவதம்

☆ புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். -வள்ளுவர்

## தூய்மை

☆ பொன்னைப் புடம்போட்டு ஒளிவிடச் செய்யுமாறு அறிஞர் தம்முடைய உள்ளத்திலிருந்து கணந்தோறும்

கடுகளவாகவேனும் மாசுகளை அகற்றிக் கொண்டே யிருப்பர். பௌ

☆ பிறர் குற்றம் காண்பது எளிது, தன் குற்றம் காண்பது கடினம், மக்கள் பிறர் குற்றங்களையே நாடுவர். பௌ

☆ உள்ளும் புறமும் ஓட்டையில்லாத அரணே அரண் எனத் தகும். அதுபோல் ஆக்கிக் கொள் உன்னுடைய உள்ளத்தையும். பௌ

☆ இதயத்துக்குள் தீய எண்ணங்கள் வராமல் கவனித்துக் கொள். அவை உன்னை அறியாமலே வந்து புகுந்து விடும் தன்மையுடையன. தீய எண்ணங்கட்கு இடங் கொடாதவனே இன்பம் காண்பான். பௌ

☆ மன்னிப்புக் கேட்பதன் மூலம் அன்பு செய்யும் குணம் உண்டாகும். அக் குணத்தின் மூலம் அச்சம் அகலும், தூய்மை பெருகும். ச

☆ உண்மையே உள்ளத் தூய்மையை உண்டாக்கும், உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி. ச

☆ சடங்குகள் மனிதன் சிருட்டித்தவை. தூய்மை உடையவர் கடவுளரே. தா

☆ இன்று இங்குத் தங்குவேன். என்னைத் தூய்மை செய்து கொண்டு இறைவனிடம் நாளைப் போவேன்சி

☆ உள்ளத்தில் உண்மையில்லாதவர்கள் செய்யும் ஆராதனைகளை நான் ஏற்றுக் கொள்வேன். சி

☆ நன்மை செய்வதே தூய்மையாய் இருப்பது; தீமை செய்வதே தூய்மையின்றி இருப்பது. தீய செயல்கள் மாசுடையன, ஆதலால் அவற்றைக் கடவுளர் வெறுப்பர். சி

☆ தூய்மை என்பது யாது? உடம்பை நீரால் கழுவுவ தன்று. அறநெறியில் நிற்பதே. தீட்டு என்பது மறச் செயலே. சி

☆ கண் அழுக்கைக் காணலாம், காது அழுக்கானவற்றைக் கேட்கலாம், ஆனால் அழுக்கைக் காணவும் கேட்கவும் மனத்துக்கு இடங் கொடாதே. சி

☆ உலகத்திலுள்ள ஒவ்வொருவனும் தானே தன்னுடைய நல்ல எண்ணங்கள், சொற்கள், செயல்கள் ஆகியவற்றால் தூய்மை பெறமுடியும். ஜா

☆ தூய்மையே உயிருக்கு அடுத்தபடியாக மனிதனுக்கு நன்மையானது. அஹுரா வகுத்த அறநெறியில் நின்று மனத்தை நல்ல எண்ணங்களாலும் சொற்களாலும் செயல்களாலும் தூய்மை செய்வதே தூய்மையாகும்.

ஜா

☆ தூய்மை தெய்வத்தன்மைக்கு அடுத்த படியிலுள்ளது.

☆ துணியை நீரால் தூய்மை செய்யலாம், மனத்திலுள்ள பாவமாகிய மாசைக் கடவுள் நாமத்தால் கழுவ வேண்டும். எ

☆ இதய மாசு ஆசை, நாவின் மாசு பொய், கண்ணின் மாசு வெஃகுதல், காதின் மாசு குறளையைக் கேட்டல், கடவுளை அறியும் பக்தரிடம் மாசு எதுவும் கிடையாது

☆ நண்பனே! மனத்தால் கடவுளை வழிபடு, உன் மனம் தூய்மை பெறும். எ

☆ என் இதயம் தூய்மை அடைந்துவிட்டது, இறைவனைக் காண்கின்றேன். எ

## நட்பு

☆ கொடுக்கக் கடினமானதைக் கொடுத்தல், செய்யக் கடினமானதைச் செய்தல், பொறுக்கக் கடினமானதைப் பொறுத்தல் - இம் மூன்றும் உடையவனே நண்பன்.

பௌ

☆ நல்ல நண்பர் உடையவர் நலம்பெறுவர், தீய நண்பர் உடையவர் அழிவர். பௌ

☆ குறைகளை எடுத்துக் கூறும் நண்பன் புதையல் காட்டு பவனை ஒப்பான். பௌ

☆ எவன் உன் நண்பனோ நீ அவன்போல் ஆவாய். பௌ

☆ நட்பு என்பது நண்பனிடமுள்ள அறத்துடன் நட்புக் கொள்வதே, நண்பனைவிடப் பெருமை பாராட்ட இடம் கிடையாது. க

## நண்பன்

☆ கடவுள் நாமத்தை என்னுடைய இதயத்தில் விதைப் பவனே என் நண்பன், என் குருநாதன், என் பந்து. இ

☆ நான் நண்பனைத் தேடி அலைகின்றேன். ஆனால் என் நண்பன் என்னுடனேயே இருந்து கொண்டிருக்கிறான். ச

☆ உனக்கு நீயே நண்பன், உனக்குப் புறம்பாக நண் பனைத் தேடுவானேன்? ச

☆ நெஞ்சே! நண்பனைத் தேடிக்கொள், தூய்மையினும் தூய்மை உடையவனை, உண்மையினும் உண்மை உடையவனை நண்பனாக உடையவனே தூயவன். எ.

## நபிநாயகம்

☆ இருவினை நீக்கி மும்மலம் அகற்றி
இடும்பை செய் பொறிபுலன் நீத்து
வருதவத் தோர்கட் கிரங்கிமெய்ஞ் ஞான
வழிமுறை காட்டிய வேந்தைக்
கரையி லானந்தக் கடலெழு ஞானக்
கனியினைத் தொல்லை நாயகரை
விரிபழ மறைகள் உணர்மகு முதை
வியப்புற என்று காண்குவனே.

ஞான வாரிதியை நபிகளுக்கு அரசை
தானில மேற் சுவ டுறாத

வானமா மணியை இருநிதித் தருவை
மரபுகட் கொரு தனிச் சுடரை
மோனமா தவர்கள் தொழும்நவ மணியை
மூவுல கனைத்து மோருலகிற்
கோனியல் புரிய வருமுகம் மதுவை
குணமுடன் என்று காண்குவனே.

இ -உமறுப்புலவர்

## நம்பிக்கை

☆ பிறரை நம்பாமலிருப்பதே பிறரைப் பொய் பேசுமாறு செய்து விடுகின்றது. தா

## நல்ல குணம்

☆ மனிதனுக்குக் கடவுள் அருளியுற்றவற்றுள் மிகச் சிறந்தது யாது? நல்ல குணமே. இ

☆ நல்ல குணம், அறவழியில் பொருள் தேடுதல், உண்மை பேசுதல், கடவுளிடம் நம்பிக்கை உடைமை இந் நான்கும் உடையவன் எந்த நாளிலும் துன்பமடையான். இ

## நன்மை

☆ எதைச் செய்வதாயினும் அது பிறர்க்குத் தீமை தருமா என்று ஆராய்க, தீமை தருமானால் செய்யற்க. பௌ

☆ எல்லோரும் நன்மையையே விரும்புவர். எல்லோரையும் போன்றவன் நீ, அதனால் எல்லோர்க்கும் நன்மையே செய்க. பௌ

☆ கோபத்தைப் பொறுமையாலும், தீமையை நன்மையாலும், பொய்யை மெய்யாலும் வெல்க. பௌ

☆ பெரியோர், பகைமை என்னும் தீயை நட்பு என்னும் நீரால் அவிப்பர். பௌ

☆ தீமை செய்தவன் அதை நன்மை செய்து மாற்றுவானால் அவன் உலகத்துக்கு ஒளி தருபவனாவான்.

☆ ஏசுபவனை ஏசுபவன் இழிந்தவன்; ஏசுபவனை ஏசாதவன் இரண்டுவித வெற்றி பெறுபவன்; அவன் தன்னுடைய நன்மையையும் ஏசுபவனுடைய நன்மையையும் தேடிவிடுகின்றான். பௌ

☆ சினங் கொள்பவன் சிந்தையை அறிந்து சாந்தம் கொள்பவன் தன்னையும் அவனையும் குணப் படுத்தும் மருத்துவனாவான். பௌ

☆ நன்மை செய்யும் குணத்தை இழப்பதற்குரிய வழி நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு நன்மை செய்வதே. க

☆ பிறர் அறியும்படி செய்யும் நன்மை உண்மையான நன்மையாகாது. பிறர் அறியா வண்ணம் செய்யும் தீமையே உண்மையான தீமையாகும். க

☆ சிறியோர் சிறு நன்மைகளால் பலனில்லை என்று எண்ணி அவற்றைச் செய்யார். சிறு தீமைகள் தீமை செய்யா என்று எண்ணி அவற்றைச் செய்யாதிரார். இவ்வாறு அவர் தீமை பெருகி மன்னிக்க முடியாத அளவுக்கு வந்துவிடும். க

☆ பிறர் பெறும் நலத்தை உன்னுடைய நலமாக எண்ணு, பிறர் பெறும் தீமையை நீ பெற்ற தீமையாகக் கருது.தா

☆ கடவுள் ஒருவனுக்கு நன்மை உண்டாக்க விரும்பினால் அவன் எத்தகையவன் என்பதையே கருதார். எதைச் செய்தான் என்பதைக் கருதார். தா

☆ கடவுளுக்கு அஞ்சி பாவம் செய்யாதிருத்தல், வாழ்விலும் தாழ்விலும் வாய்மை தவறாதிருத்தல், செல்வத்திலும் வறுமையிலும் நடுநிலைமையில் நிற்றல், இம் மூன்றும் வீடளிப்பன. இ

☆ உலக சுகத்தில் ஆழ்தல், உலுத்தனாயிருத்தல், தற்பெருமை கொள்ளுதல் இம் மூன்றும் நாசம் தருவன. இ

☆ அறச்செயல்கள் செய்யாதவர்க்கு கதி மோட்சம் கிடையாது. இ

☆ வீடில்லாதவர்க்கு வீடளிப்போர், தாழ்ந்தோரை உயர்த்துவோர், பிறர் குறைகளைத் தீர்ப்போர், இவரை அல்லும் பகலும் மறவேன் என்று இறைவன் அருள் கின்றான். இ

## நன்மை செய்தல்

☆ பிறர் நன்மை செய்தால் நன்மை செய்வேன், தீமை செய்தால் தீமை செய்வேன் என்று கூறற்க. நன்மை செய்தால் நன்மை செய்வேன், தீமை செய்தால் தீமை செய்யேன் என்று உறுதி செய்துகொள்க. இ

## நன்றி யறிதல்

☆ நன்றி மறத்தலே பாவங்களில் தலையாயது. எ

☆ உனக்கு நன்மை செய்வோர்க்கே நீ நன்மை செய்வ தானால், அதில் உள்ள மேன்மை யாது? பாவிகள் கூட அவ்வாறுதானே செய்கிறார்கள்? கி

## நாடு

☆ நாட்டின் செல்வம் பொருளன்று, அறமே யாகும்.

☆ செங்கோல் உள்ள நாட்டில் தரித்திரமும் தாழ்வும் நாண வேண்டியவை, கொடுங்கோல் உள்ள நாட்டில் சீரும் செல்வமும் நாண வேண்டியவை. க

## நாணம்

☆ நாணமே அறத்தின் தாய், இரக்கமே அன்பின் தாய்.
நன்மை தீமை வேறுபாடு தெரிவதே அறிவின் தாய்,
பிறர் நலம் பாராட்டுவதே நட்பின் தாய். தா

## நாவடக்கம்

☆ ஆக்கப் படுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத்து உய்ப்பிக்கும்

காக்கப படுவன இந்திரியம் ஐநதினும்
நாக்கலலது இல்லை நனிபேணு மாறே.

ச. வளையாபதி

## நெஞ்சுக்கு

☆ பேசிற்றே பேச லல்லால பெருமையொன் றுணர
லாகாது
ஆசற்றார் தங்கட் கல்லால அறியலா வானு மலலன்
மாசற்றார் மனத்துளானை வணங்கிநா மிருப்பதலலால
பேசத்தா னாவதுண்டோ? பேதை நெஞ்சே!
நீ சொல்லாய்.

-தொண்டரடிப் பொடியாழ்வார்

☆ நெஞ்சமே! நல்லை நலலை உன்னைப்பெற்றால்
என்செய் யோம்? இனி யென்ன குறைவினம்?
மஞ்சனை மலராள் மணவாளனைத்
துஞசும் போதும் விடாது தொடர்கண்டாய்.

ஊனில வாழுயிரே! நலலை போல் உனைப் பெற்று
வானு ளார்பெரு மான்மது சூத னென்னம்மான்
தானும் யானுமெல்லாம் தன் னுள்ளே கலந்
தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமொத்தே.

-நம்மாழவாா

☆ வாழ்த்துமின் தில்லை, நினைமின் மணிமன்றம்,
தாழ்ததுமின் சென்னி தலைவற்கு - வீழ்த்த
புறநெறி யாற்றாது அறநெறி போற்றி
நெறி நின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கடனிதுவே.

-குமரகுரபரர்

☆ ஒன்றென் றிருதெய்வ முணடென றிரு உயர்
செல்வமெலலா
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமு நடபும்

நன்றென் றிரு நடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேவுப தேசமிதே.

-பட்டினத்தார்

☆ அறிமின் அறநெறி, அஞ்சுமின் கூற்றம்,
பொறுமின் பிறர் கடுஞ்சொல, போற்றுமின் வஞ்சம்,
வெறுமின் வினைதீயார் கேண்மை, எஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

ச -நாலடியார்

☆ இன்றுளார் இன்றேயு மாய்வர், உடையதூஉம்
அன்றே பிறருடைய தாயிருக்கும் - நின்ற
கருமத்த தல்லாத கூற்றின்கீழ் வாழ்வார்
தருமந் தலைநிற்றல் நன்று.

ச -அறநெறிச்சாரம்

☆ புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை - இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேளறச்
சென்றான் எனப்படுத லான்.

ச -நாலடியார்

☆ சென்றநாள் எல்லாம் சிறுவிரல வைத்தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கும் உணர்வரிது - நின்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம். ச -அறநெறிச்சாரம்

☆ நெஞ்சே, உலக வாழ்வில் கண்ட உயர்ந்த உண்மையை உனக்கு உரைக்கின்றேன்; உண்மை யாகக் கடவுளுக்கு உகந்தவண்ணம் ஒழுகுவதே அறிவாகும்.

☆ உலகத்தில் இரண்டு சக்திகள் உள்ளன. அவையே நன்மை தீமை என்பன. அறிவுடையோர் தக்கதைத் தேர்ந்துகொள்க, நன்மையை நாடுக, தீமையை அணுகற்க. ஜா

## பக்தன்

☆ கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும ஒக்கவே நோககுவார்
கூடும் அனபினில கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

ஈர அன்பினர் யாரும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?-சேக்கிழார்

☆ மனனும் நிராசையின்னும் வநததலல, உன்னடிமை
என்னுநிலை எய்துமாறு என்? -தாயுமானவர்

☆ செய்யவேண்டியதைப் பயனை எதிர்பாராமல
செய்பவனே பரம பகதன் எனப்படுவான.

☆ பகவான் கூறுகிறார்- புலன்களை அடக்கி, எலலோரை யும் சமமாக எண்ணி, எலலோருடைய நன்மையைத் தேடுவதில் இன்பம் காண்பவன் என்னை அடைவான்.
-பகவத்கீதை

☆ பக்தன் என்ன? எலலோர்க்கும் இதம் செய்பவன், அவன் அறிவு பெறறவன், உண்மையை உணர்ந் தவன. மனம் மொழி மெய் மூனறிலும் மாசு அகற்றிய வன். அவனுக்கே நற்சிந்தை என்னும் அரசை அஹூர மஜ்தா அருள்வார். ஜா

☆ ஓ அஹூரா, அறிவுடையவனுககுத் தெளிவாகும் உண்மை இது. எவன தன் ஆறறல முழுவதையும். ஜா

☆ அறச் செயல ஆனந்தத்தையும், மறசெயல வருத் தத்தையும் எவனுக்குத் தருமோ அவனே பக்தன். இ

☆ உங்களில் எவன் சிறந்த குணம் உடையவனோ அவனே எனக்குப் பிரியமானவன். இ

☆ கடவுளிடம் அன்புகொண்டு பிறர்க்குத் தானம் செய் பவன் கடவுள் பக்தன். இ

☆ பிறர்க்கு உதவி செயபவன், கோபததை அடக்கு பவன், பிறரை மனனிபபவன, இவாக்கு இறைவன எப்பொழுதும் இரங்குவான். இ

☆ அலலா நெறியில நின்று அழிபவர் இறநதோர் அலலர், அலலாவுடன வாழபவா. இ

☆ நித்திய ஜீவன் பெற விரும்புவோர் நித்தம் ஆயிரம் தடவை இறந்து உயிாக்க வேண்டும். இ

☆ கடவுளை அறிந்தவா எலலோரையும் சமமாக எண்ணு வார். கி

☆ எமனை வெலல விருமபினால இறைவனைப் போற்றி எலலோர்க்கும் நன்மை செய்க

☆ உண்மையை உணணாவிரதமாகவும, திருபதியைத் தல யாத்திரையாகவும, தியானததைப புணணிய நீராடலாகவும், கருணையை மூர்ததியாகவும், மனனித தலைச செபமாலையாகவும் கொள்பவரே கடவுள் அருள பெறுபவர்கள்.

☆ கடவுள் நாமம் கணநேரம் மனததில இருந்தாலும் போதும், அறுபததெட்டுத் தீர்த்தஙகளில ஆடியதை ஒக்கும்.

## பக்தர்

☆ கடவுளே, உம் சன்னிதானததுக்கு வரத் தக்கவர் யாா? அறஞ் செய்பவா, உள்ளததில் உண்மையுடையவர், சொன்ன சொல தவறாதவர், பிறர்கக்குத் தீஙகு செய்யா தவர், அடியார்களைப் போற்றுபவர், இவர்கள் ஒரு நாளும் நீக்கப்படுவதில்லை எ

☆ கடவுளை அடைக்கலம் புகுந்துளேன், அவரே துன் பத்தில் தோன்றாத் துணை. பூமி பிளந்தாலும் மலை நகாநதாலும் கடல பொஙகினாலும் அஞசேன். எ

☆ மனத்திலுள்ள தீமையை அகற்றிச் சிறு குழந்தைகளாக ஆகாவிட்டால் நீங்கள் கடவுள் இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள். கி

☆ பிரபுவே பிரபுவே என்று என்னைப் போற்றுவோர் எலலாம் கடவுள் இராச்சியத்தில் புகுவதில்லை. என் தந்தையின் ஆணைப்படி நடப்பவரே புகுவர். கி

## பக்தி

☆ செல்வமிருந்தும், வருந்துவோர்க்குக் கருணை காட்டாதவனிடம் கடவுள் பக்தி இருப்பதாகக் கூறுவது எங்ஙனம்? கி

☆ கடவுளிடம் பக்தி செய்பவர்க்கு எல்லாம் நன்மையாகவே இருக்கும். கி

☆ அறத்துடன் கூடாத பக்தி பக்தியாகாது.

☆ உலக ஆசை உள்ளவரையில் உத்தமனிடம் பக்தி உண்டாக மாட்டாது.

## பகைமை

☆ பகைமையை விட்டவரே உலகத்தில் இன்பம் துய்ப்பவர். பௌ

☆ இவன் ஏசினான், அடித்தான் என்ற எண்ணங்களை நினையாதவர்கள் பகைமை உணர்ச்சியினின்றும் நீங்கி விடுவார். பௌ

☆ பகைமை ஒருநாளும் பகைமையால் போவதில்லை, பகைமையின்மையாலேயே போகும், இதுதான் அறம் கூறும் நெறி. பௌ

☆ எவன் பொங்கி எழும் வெகுளியை அடக்குகிறானோ அவன் மனத்தின் சாரதி, மற்றவர் எல்லோரும் கயற்றை மட்டும் பிடித்திருப்பவர். பௌ

☆ சான்றோர் பிழையைத்தான் வெறுப்பர், பிழை செய்தவனை வெறுக்கமாட்டார். சி

☆ பகைவர்களைத் தூய்மையால் வெல்லவேண்டும். தீயவர்களுடன் நட்புக்கொள்ளலாகாது. ஜா

☆ துவேசம் கொள்பவன் இரத்தம் சிந்துபவனுக்கு இணையாவான். எ

☆ துவேசம் துவேசத்தை எழுப்பும், ஆனால் அன்பு தவறுகளை யெல்லாம் மறைத்து விடும். எ

☆ பகைவன் பசியாயிருப்பின் உணவு கொடு, தாகமாயிருப்பின் நீர் கொடு. இதுவே அவனை ஒறுக்கும் வழி. எ

☆ பகைவன் வீழ்ந்தால் மகிழாதே. அவன் எனக்குச் செய்தது போல் நான் அவனுக்குச் செய்வேன் என்று எண்ணாதே. எ

☆ பகைவனுடன் போர் புரிவதற்காக அவனை நெருங்கியதும், சமாதானம் செய்து கொள்வதாகக் கூறு. எ

☆ பகைவரையும் நேசி, உன்னை வெறுப்பவர்க்கும் நன்மை செய். உன்னைச் சபிப்பவரையும் வாழ்த்து, உனக்குத் தீமை செய்வோர்க்கும் பிரார்த்தனை செய். கி

☆ உண்ணாவிரதம், தானம், ஜபம் ஆகியவற்றைவிட உயர்ந்த காரியமொன்று கூறட்டுமா? ஒருவரோடொருவர் சமாதானமாயிருத்தலே. பகைமையும் துவேசமும் நன்மையை வேரோடு சாய்த்துவிடும். கி

☆ நன்மை செய்தால் நன்மை செய்வேன்; தீமை செய்தால் தீமை செய்வேன் என்று கூறற்க. நன்மை செய்தால் நன்மை செய்யவும், தீமை செய்தால் தீமை செய்யாதிருக்கவும் உறுதி செய்து கொள்க. இ

☆ உண்மையான சாந்தமே சர்வ புண்ணியங்களுக்கும் பிறப்பிடமாயுள்ளது. இ

☆ அடியார்களே, சகோதரர்களா இருங்கள், மூன்று இரவுகளுக்கு மேலாகப் பகைமையைக் காப்பது முசுலிமுக்கு ஏற்றதன்று. இ

## பட்டங்கள்

☆ மனிதன் தரும் பட்டங்கள் பிரபு, அரசன் முதலியன. இயற்கை தரும் பட்டங்கள் அன்பன், அறவோன், மெய்யன் முதலியன. இயற்கை தருவனவற்றைத் தேடினால் மனிதன் தருவன தாமாக வந்து சேரும். க

## படிற்றொழுக்கம்

☆ அறநெறி நிற்பவரிடம் படிற்றொழுக்கம் உண்டாகாது. ஆசை வயப்பட்டோரிடமே அது உண்டாகும். தா

☆ உள்ளன்பில்லாதவர் கடவுளை ஏமாற்றுபவர். ஆனால் அவரே அடிநரகம் செல்பவர். இ

☆ சகோதரனைத் துவேசிப்பவன் கொலை செய்பவன், கொலை செய்பவனுக்குக் கதிமோட்சம் கிடையாது என்பதை அறிவாய். கி

## பண்பாடு

☆ அறிவில் ஆர்வமுடையவர், தாழ்ந்தவரிடமிருந் தாயினும் அறிவுபெற நாணாதவர், இவரே பண்பாடு உடையவர். க

## பணிவுடைமை

☆ எவன் சிறு குழந்தைபோல் பணிவுடையவனோ அவனே தேவலோகத்தில் பெரியவனாக மதிக்கப் படுவான். எ

☆ எல்லோரும் பணிவுடையவரா இருங்கள். கடவுள் செருக்குடையோரை விரும்புவதில்லை, பணிவுடையோர்க்கே அருள் செய்வர். கி

## பாவம்

☆ பாவம் செய்துவிட்டு அதற்காக வருந்தி அதைவிட்டு விலகுவதினும் அதைச் செய்யாதிருப்பதே நன்று. ஜா

☆ பாவத்தின் கூலி மரணமே. கி

☆ அறம் இதுவென்று அறிந்தும் அதைச் செய்யாதவன் பாபம் செய்பவனே. கி

## பிறர் தீமை

☆ பிறர் தீமை செய்தால் அதை நன்மையைக்கொண்டு மாற்றுவாய். அப்போது உனக்குப் பகைவனாயிருந் தவன் நண்பனாக ஆகிவிடுவான். இ

☆ பிறர் தீமை செய்தால் அவரை மன்னித்துவிடுக, அன்பு செய்பவரையே கடவுள் விரும்புகிறார். இ

☆ பிறர் தீமை செய்தால் அதைப் பொறுத்து மன்னிப் பாய். அறமனைத்தும் அதுவே. இ

## புகழ்

☆ பலமுடையவன் என்று தெரிந்தும் பலமில்லாதவனாக நடப்பவன் புகழ் பெறுவான். தூய்மையுடையவன் என்று தெரிந்தும் இழிவு பெறத் தயாராகவுள்ளவன் புகழ் பெறுவான். தா

☆ தன்னைப் புகழ்ந்து கொள்பவன் இகழப்படுவான். பணிவு உடையவன் புகழப்படுவான். கி

## புத்தர்

☆ முன்றான் பெருமைக்கண் நின்றான் முடிவெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமே மொழிந்தான் தனக் கென்று
ஒன்றானு மில்லான் பிறர்க்கே உறுதிக் குழந்தான்
அன்றே இறைவன் அவன்தான் சரணங்க ளன்றே.

பௌ-குண்டலகேசி

☆ உயிர்க ளெல்லாம் உணர்வு பாழாகிப்
பொருள் வழக்கு செவித்தொளை தூர்த்து அறிவிழந்த
வறந்தலை உலகத்து அரும்பாடு சிறக்கச்
சுடர் வழக்கற்றுத் தடுமாறு காலையோர்
இளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தேன்.

பௌ-சாத்தனார்

☆ இருட்பார வினைநீக்கி
எவ்வுயிர்க்கும் காவலென
அருட்பாரம் தனிசுமந்த
அன்றுமுதல் இன்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ்
வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ
புண்ணிய! நின்திருமேனி. பௌ

☆ அருள் வீற்றிருந்த திருநிழற் போதி
முழுதுணர் முனிவ, நிற்பரவுதும் தொழுதக
ஒருமனம் எய்தி இருவினைப் பிணிவிட்டு
முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்து
ஓங்குநீர் உலகிடை யாவரும்
நீங்கா இன்பமொடு நீடுவாழ் கெனவே. பௌ

## பூசை

☆ காயமே கோயி லாக
கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக
மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே. -திருநாவுக்கரசு

## பெண்

☆ கடவுள் ஆணுக்குவிடப் பெண்ணுக்கே அதிக அறிவை அளித்துள்ளன். எ

☆ காம இச்சையுடன் பெண்ணின் கணுக்காலைப் பார்த்தாலும் சோரம் செய்தவனே யாவான். எ

☆ பெண்ணை அழும்படி செய்யாதே, ஆண்டவன் அவள் கண்ணீரை அளந்து பார்ப்பான். எ

## பெருமை

☆ பெருமை விரும்புவோர் யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல் வேண்டும். தா

☆ பெரியோர் பெரியோராகக் காட்டிக்கொள்வதில்லை, அதனால் பெருமை பெறுகின்றார். தா

## பெற்றோர்

☆ பெற்றோரைப் பேணுவதே அறத்தின் வேர், அந்த மரத்தினின்றே அனைத்தறமும் கிளைவிட்டு வளருகின்றன. க

## பேறு

☆ பிறர்க்கு உதவுவதே பெரும் பேறு; பெரியோருடன் நட்புக் கொள்வதே பெரும் பேறு; துன்பம் வரினும் சோர்ந்துவிடாதிருப்பதே பெரும் பேறு. பௌ

## பொறுமை

☆ தீய சொற்களைப் பொறுத்துக்கொள். சினம் கொள்ப வரிடம் சினம் கொள்ளாதே. தீமை செய்பவர்க்குத் தீமை செய்யாதே.

☆ சினத்தைப் பொறுமையாலும், தீமையை நன்மை யாலும், பொய்யை மெய்யாலும் வெல்க; பொறுமை யே பொன்றாமையை அளிப்பதாகும்.

-மகாபாரதம்

☆ திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

☆ பொறுத்தல் இறப்பின் என்றும், அதனை
மறத்தல் அதனினும் நன்று.

☆ கறுத்தின்னா செய்தவக் கண்ணும், மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

☆ இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல். - வள்ளுவர்

☆ பிறர் செய்யும் தீமைகளை மனத்தில் பகைமையின்றிப் பொறுத்துக் கொள்பவனே பக்தி செலுத்தத் தக்க சான்றோன் ஆவான். பௌ

☆ மன்னிப்பு வேண்டுபவனுக்கு மன்னிப்புத் தருக, தராத வன் தவறு செய்பவன். பௌ

☆ தன்னை யொருவன் இகழ்ந்துரைப்பின் தானவனைப்
பின்னை யுரையாப் பெருமையோன் - முன்னை
வினைப் பயனால் ஆயிற்றால் என்ற தன்கண்
மெய்ம்மை
நினைத்தொழிய நெஞ்சினோய் இல்.

ச - அறநெறிச்சாரம்

☆ பிறர் இகழ்ந்தாலும் அறிஞன் சினம்கொள்ள மாட்டான், பொறுத்துக்கொள்வான். ச

☆ நான்மட்டும் வருந்தவில்லை, எல்லாப் பிராணிகளுமே வருந்துகின்றன என்று எண்ணித் தமக்கு வரும் துன்பங்களைப் பொறுப்பர் அறிஞர். ச

☆ கலங்காத மனத்துடன் பொறுப்பவரே மெய்ப்பொருள் காண்பவர். அவரே அறநெறியில் நிற்பர். ச

☆ செல்வத்துட் செல்வம் பொறுமை பூண்பதே. சி

☆ பிறரை மன்னித்துவிடு, ஆனால் உனக்கு மட்டும் மன்னிப்பு அளிக்காதே. சி

☆ ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்;
பற்றா மாக்கள் தம்முடனாயினும்
செற்றமும் கலாமும் செய்யா தகலுமின். - சாத்தனார்

☆ பிறர் செய்யும் தீமைகளிலிருந்து பிழைத்துவிட முடியும். ஆனால் நீயே செய்துகொள்ளும் தீமைகளிலிருந்து பிழைக்க முடியாது. க

☆ இழித்துரைப்பதைப் பொருட்படுத்தாதவனிடம் எந்தத் துன்பமும் வந்து சேராது. எ

☆ தீமை செய்தவரிடம் பொறுமை காட்டுவதே நற்குணத்தின் அடையாளமாகும். எ

## மதப்பற்று

☆ தனக்கு விரும்புவதைத் தன் சகோதனுக்கும் விரும்பாதவன் என்றும் மதவிசுவாசமுடையவனா நான். இ

## மதப் பொறுமை

☆ எங்கள் வேதமும் உங்கள் வேதமும் இறைவனால் தரப்பட்டவை, இரண்டையும் நம்புகின்றோம். எங்கள்

கடவுளும் உங்கள் கடவுளும் ஒருவரே, அவருக்கே நாங்கள் பணிந்துளோம். இ

☆ முசுலிம்களோ மற்றவர்களோ யாராயினும் கடவுளை நம்பி அறநெறியில நின்றால அவர்கு ஆண்டவன் அருள்வார். அவர்கள் அஞ்சவேண்டியதுமில்லை, வருந்த வேண்டியதுமில்லை. இ

## மரணம்

☆ உடம்பே, தான் என்று உணர்பவன் மரணத்துக்கு அஞ்சுவான். ஆன்மாவே, தான் என்று உணர்பவன் மரணத்துக்கு அஞ்சமாட்டான். ச

## மதம்

☆ ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது வாமே - திருமூலர்

☆ வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே! நின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா!
சைவமுத லாமளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத் தநீ யுன்னையான் அணுகவுந்
தண்ணருள் வகுக்க விலையோ!

பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யறிவிற்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே.

- தாயுமானவர்

☆ சாதியுமதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன் சாத்திரக்
குப்பையுந் தணந்தேன்
நீதியு நிலையுஞ் சத்தியப்பொருளு நித்தியவாழ்க்
கையுஞ் சுகமு
மாதியு நடுவு மந்தமுமெல்லா மருட்பெருஞ்
சோதியென் றறிந்தேன்
ஒதியவனைத் துநீயறிந்தது நானுரைப்ப
தென்னடிக் கடியுனக்கே

- இராமலிங்க சுவாமிகள்

☆ ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. - திருமூலர்

☆ மதம் என்பது யாது? தீமை செய்யாமை, நன்மை மிகுதியாகச் செய்தல், அன்பும் அருளும் கொள்ளுதல், உண்மையும் தூய்மையும் உடைமை, இவையே மதமாகும். - பௌ

☆ ஆவேறு உருவின வாயினும், ஆபயந்த
பால்வேறு உருவின அல்லவாம் - பால்போல்
ஒரு தன்மைத் தாகும் அறநெறி, ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு. பௌ- நாலடியார்

☆ அகிம்சையே தலைசிறந்த மதமாகும். -ச

☆ என் மதம் கூறும் நான்கு கடமைகள் இவை :- தக்கார்க்கு உதவுதல், நடுவு நிலைமை தவறாமை, எல்லோரிடமும் நட்புக் கொள்ளுதல், பொய்மை விலக்கி வாய்மையில் நிற்றல். - ஜா

☆ புனிதர்கள் வகுத்த மதம் உண்மை, அதன் அனுட்டானம் அறவாழ்க்கை, அன்பும் அருளும் செய்தல்

அதன் முறை, அங்ஙனமிருக்க பல கொள்கைகளும் பல மதங்களும் எதற்காக? - ஜா

☆ பிற மதத்தானாயினும் நெறி பிறழாதவ னாயின் அவனும் ஆண்டவன் அடியவனே. - எ

☆ மதம் இன்றேல் உண்மையான அற வொழுக்கம் இல்லை; அற வொழுக்கம் இன்றேல் உண்மையான மதமில்லை. எ

☆ மதநம்பிக்கை இருந்தும் அறச் செயல்கள் செய்யா விடில் யாது பயன்? மத நம்பிக்கை காப்பாற்றுமோ? அறச்செயல்கள் இல்லாத மத நம்பிக்கை மரணத் தையே தரும் கி

☆ கடவுள் ஏற்கும் தூய மதம் துன்புறுவோர்க்கு உதவு வதும், உலக ஆசைகளில் ஈடுபடாதிருப்பது மாகும். கி

☆ மத விடயத்தில் கட்டாயப் படுத்துதல் என்பது கூடாது. இ

☆ அல்லாவிடம் சரண்புகுந்து அறநெறி நிற்பவனைவிடச் சிறந்த மதம் உடையவன் எவன்? இ

☆ பிற மதத்தாரிடம் "நான் வணங்குவதை நீர் வணங்க மாட்டீர், நீர் வணங்குவதை நான் வணங்க மாட்டேன், உம்முடைய மதம் உமக்கு, என்னுடைய மதம் எனக்கு" என்று கூறுக. இ

☆ உள்ளன்புடனும் நம்பிக்கையுடனும் வணங்கு; பிரார்த்தனை செய்; கடவுள் கூறிய தானத்தைக் கொடு, இதுவே உண்மையான மதம். இ

☆ மதம் என்பது தண்டு கமண்டலம் அல்ல, நீறு பூசுவதுமன்று, மழிப்பதும் நீட்டுவதுமல்ல, மனத்தில் மாசில்லாமலிருப்பதே மதம். சீ

☆ எல்லா மதங்களும் இறைவனால் உண்டாக்கப் பட்டவை, எல்லாம் சமமானவை. சீ

☆ எல்லா மதங்களையும் பார்த்துவிட்டேன், எதுவும் இறைவனைப் பற்றியதாகத் தெரியவில்லை, கடவுள் அன்பும் அருளும் இல்லையானால் கடுகளவும் பயன் படாது. சீ

## மன்னித்தல்

☆ மனிதன் செய்பவற்றுளெல்லாம் மிகுந்த அழகுடை யது எது? பிறர் தீங்கு செய்தால் அவரை மன்னித்து விடுவதே. எ

☆ சகோதரன் தீமை செய்தால் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும், ஏழு தரமா? எழு நூறு தரம் மன்னிப் பாய். கி

## மனச்சான்று

☆ உண்மை பேசவும் ஒழுக்கமாய் நடக்கவும் சான்றோர் முயல்வதில்லை, அவர் செய்வதெல்லாம் அகச்சான்று காட்டும் வழியில் செல்வதே. க

☆ மனிதன் கவனிக்க வேண்டியவற்றுள் முதன்மை யானது மனச் சான்றை ஏமாற்றாதிருப்பதே. க

## மனம்

☆ கடவுளை அறிந்தபின் என் மனத்துள் பொய் புக வில்லை. இ

☆ மனிதனுடைய மனம் மலையினும் நதியினும் அபாய முடையது. கடவுளை அறிவதினும் கடினமானது. க

☆ மனத்தை நிறுத்தினால் நம்மோடு நிற்கும், விட்டு விட்டால் நம்மை விட்டு ஓடிவிடும். க

☆ மனத்தைக் தூய்மை செய்யும் வழி ஆசைகளைக் குறைத்துக் கொள்வதே. க

☆ அசையாத மனத்துக்கு அகில உலகும் அடிபணியும்.

☆ தீமை செய்தவன் கழிவிரக்கம் கொண்டு தீமை செய் வதை விட்டு நன்மை செய்ய முல்வானாகில் அவனே கேட்டை நலமாகச் செய்யும் தந்திரம் அறிந்தவன். தா

☆ மனத்தகத்தே புத்தருக்கு இடம் தந்தால் புத்தராக ஆகிவிடுவோம், பாம்புக்கு இடம் கொடுத்தால் பாம் பாக ஆகிவிடுவோம். கி

☆ மனத்தில் களங்கம் இல்லையெனில் துன்பம் என்பதை அறியோம். அப்போது அனைத்திலும் இன்பம் காண் போம். சி

☆ தீய எண்ணம் என்னும் விருந்தாளிக்கு இடம் தந்தால் அது வீட்டின் அதிகாரி ஆகிவிடும். எ

## மனிதன்

☆ அப்பா! உனக்கு இந்த வேதப்பொருளைக் கூறு கிறேன். மனித குலத்தினும் உயர்ந்தது எதுவுமில்லை. எவனும் தன்னை இழிவாக எண்ணுதலாகாது. தன்னை இழிவாக எண்ணுபவன் வெற்றி காணமாட்டான்.

- மகாபாரதம்

☆ அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்.

☆ உறுப்பொத்தல் மக்களொப் பன்றால், வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

- வள்ளுவர்

☆ மனிதர் அனைவரும் சகோதரரே, எல்லோரும் இறைவன் அருள் பெறுவர். பிறர் துன்பம் என் துன்பம், பிறர் நன்மை என் நன்மை. சி

☆ உலக முழுவதிலும் அன்னியர் என்பவர் யாருமிலர், மனிதன் எதைச் செய்கிறானோ அதுவாக ஆகிறான். சி

☆ கையால் வேலை செய்து பிழைப்பவன் கடவுள் நெறியில் நிற்பவன். எ

☆ ஒவ்வொரு மனிதனும் உலக முழுவதற்கும் சமான மானவனே. எ

☆ உலகத்திலுள்ள மக்கள் அனைவரையும் ஒரே ரத்த பந்த முடையவராகவே கடவுள் படைத்திருக்கிறார்.

☆ மனிதர் கடவுள் போலவே ஆக்கப்பட்டுளர். கி

☆ ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் ஒரு தேவ தூதனையும் சாத்தானையும் நியமித்திருக்கிறார். கி

☆ நாம் கடவுள் உடைமை, கடவுளிடமே திரும்பிச் செல்வோம். கி

☆ நான் நல்லவன் அல்லேன், யாரும் கெட்டவராக இருக்கக் காணேன். கி

☆ மனிதனே! உன்னுடைய நலத்தை நீ விரும்பினால், அறம் செய்க, ஆணவத்தை நீக்குக. கி

☆ கடவுள் ஒளி ஒவ்வொரு மனிதருடைய இதயத்திலும் இருப்பதால் மனிதர் எல்லோரையும் சமமாகவே பாராட்டு. இ

☆ மரணம் என்பது மலையினும் பெரிது, மயிரினும் சிறிது. சி

## மறம்

☆ வண்டியின் சக்கரம் வண்டியுடன் இருக்கும் காலையில் பின்தொடர்ந்து போவதுபோல், துன்பமானது மனம் மொழி மெய் மூன்றினும் தீமையுடையவன் பின்னால் தொடர்ந்து செல்லும். பௌ

☆ மனிதன் நடக்கும்போது அவனுடைய நிழல் அவனை விடாமற் செல்லுவதுபோல, இன்பமானது மனம், மொழி, மெய் மூன்றினும் நன்மையுடையவன் பின் னால் தொடர்ந்து செல்லும். பௌ

## முத்தி

☆ எவன் ஐம்பொறிகள்ள அடக்கி ஆள்கின்றானோ, எவன் அவா, வெகுளி, அச்சம், மூன்றையும் அறவே விலக்குகின்றானோ, அவனே சித்தி பெறுபவன்.

☆ பகவான் கூறுகிறார் :- என்னிடத்திலேயே சரண் புகு வாய், எல்லாப் பாவங்களினின்றும் உன்னை விடுவிப் பேன். துக்கப்படாதே.

☆ காமம், சினம், அவா மூன்றுமே நரகத்தின் வாயில்கள், அவையே ஆன்மாவை அழிப்பன, இருள் நிறைந்த இந்த வாயில்களிடம் செல்லாதவனே எப்பொழுதும் பரகதி அடைவான். பகவத்கீதை

☆ காமம், வெகுளி, மயக்கம் மூன்றை அறவே ஒழித்தவர் கட்குத் துன்பம் கிடையாது. முத்தி பெறுவர். பௌ

☆ மெய் வாய் கண் மூக்குச் செவி எனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக் - கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்.

ச - நாலடியார்

☆ நல்ல அறிவு, நல்ல நம்பிக்கை, நல்ல ஒழுக்கம், நல்ல நோன்புகள், இவையே வீடு தருவன. ச

☆ வீடு என்பது உன்னுடைய உள்ளத்திலேயே உளது. ச

☆ உண்மையான அறிவைப் பெற்றுப் பகைமை உணர்ச்சி அகற்றினால் வீடு பெறலாம், அதுவே அழியா இன்பம். ச

☆ வீடு அடையும் வழிகள் எவை? முதல் வழி வண்மை, இரண்டாவது வாய்மை, மூன்றாவது நன்றியறிதலுடைமை, நான்காவது மன நிறைவுடைமை, ஐந்தாவது எல்லோரிடமும் நட்புக் கொண்டு நன்மை செய்தல். ஜா

☆ வீடு கிடைக்குமோ என்று யாரும் ஏங்கவேண்டாம், எந்தப் பாவத்தையும் நீக்க என்னுடைய மதத்தில் வழியுண்டு. ஜா

## மனோ தைரியம்

☆ அறம் இதுவென்று அறிந்து அதைச் செய்யாதிருப்பவர் மனோ தைரியம் இல்லாதவரே. க

## முசுலிம்

☆ நன்மை செய்ததற்காக மகிழவும், தீமை செய்ததற்காக வருந்தவும் செய்பவர் அனைவரும் முசுலிம்களே. இ

☆ தனக்கு விரும்புவதைச் சகோதரனுக்கும் விரும்பாதவன் முசுலிம் ஆகான். இ

☆ முசுலிம்கள் எல்லோரும் சகோதரர்களே. இ

## மூதாதையர்

☆ மூதாதையர் ஓதியபடி ஒழுகுவதே அறத்தின் வேராகும். கி

## மௌனம்

☆ சிந்திக்கும் நிலை பெற்றவர் பேசார், பரிபூரண அறிவு பெற்றவர் பேசார், பேசாதவரே உண்மையில் பேசு பவர். மனத்தைத் தூய்மை செய்பவரே உண்மையில் அறிவு பெற்றவர்.

## யாம் இரப்பவை

☆ பொருளும் பொன்னும் போகமு மல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலி தாரோயே.

கடுவனிள வெயினனார்

☆ மறம் திகழும் மனமொழித்து வஞ்ச மாற்றி
வன்புலன்க ளடக்கிடர்ப் பாரத் துன்பம்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறம்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
நிறம் திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க வென்றுகொலோ நிற்கு நாவே?

☆ மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்
ஐயனே! அரங்கா! வென் றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந் தேனென்றன் மாலுக்கே.

-குலசேகரர்

☆ பொல்லா தவநெறி நில்லா தவனைம்புலன் கடமை
வெல்லாத வன்கல்வி கல்லாத வன்மெய்
யடியவர்பால்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின்
திருவடிக்கன்
பில்லா தவன்மண்ணி லேன்பிறந்தேன் கச்சி
யேகம்பனே.

சொல்லால் வருங்குற்றஞ் சித்தனையால் வருந்
தோடஞ் செய்த

பொல்லாத தீவினைப் பார்வையிற் பாவங்கள்
புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி
ஏகம்பனே.
-பட்டினத்தார்

☆ கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துயரச் சமாதிகளைத்
தருண நின்னருளாற் றவிர்த்தவர்க் கின்பந்தரவும்
வன்புலை கொலையிரண்டும்
ஒருவிய நெறியிலுல கெலா நடக்கவுஞற்றவு
மம்பலந்தனிலே
மருவிய புகழை வழுத்தவு நின்னை வாழ்த்தவு
மிச்சைகா ணெந்தாய்.

இவையலாற் பிறிதோர் விடயத்தி லிச்சை
யெனக்கிலை யிவையெலா மென்னுட்
சிவையொடு மமர்ந்த பெருந்தயா நிதிநின்
திருவுளத்தறிந்தது தானே
வசமிலே னெனினு மிச்சையின்படி நீதருதலே
வேண்டு மிவ்விச்சை
நவையிலா விச்சையென அறிவிக்க் அறிந்தனன்
நவின்றன னெந்தாய்.
- இராமலிங்க சுவாமிகள்

☆ கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றம் செற்றம் இவைமுதலாய
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வசமல்ல,
நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்த மர்நர கத்திடல் அஞ்சு,
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய
இடை மருதுறை எந்தை பிரானே. -சுந்தர்

☆ பிரார்த்தனையின் மூலம் ஆன்மபலம் பெறுதல் பிரார்த் தனையை உள்ளன்புடன் செய்வதைப் பொறுத்த தாகும். தா

## யோகம்

☆ யோகம் என்பது இதுவே. புலன்களை அடக்கி ஆள் வதே அது. -உபநிடதம்

## வணக்கம்

☆ அறத்தை உண்டாக்கிய அறிவனை, அருளும் ஆற்ற லும் நிறைந்தவனை, நல்லன எல்லாம் ஆக்கியவனைப் போற்றுவோம். ஜா

☆ அறநெறி நின்ற சான்றோரை யாவர்க்கும் நன்மையே தேடிய நல்லவரை, அருள் நிரம்பிய தூயோரைப் போற்றுவோம். ஜா

## வழிபாடு

☆ பகவான் கூறுகிறார் :- இதயத்திலிருந்து பகைமை எண்ணம் அனைத்தையும் நீக்கிவிட்டு அறச் செயல் களைச் செய்வதன் மூலம் என்னை வழிபடுவாய்.
- பகவத்கீதை

☆ எல்லாவற்றிலும் மேலாக உண்மையாக நடப்பதே இறைவன் வழிபாடாகும். - பிராமணம்

☆ ஆசையின் காரணமாக ஒப்பில்லாதவன் எவனும் ஆண்டவனை வழிபடுபவனாகான்.
- விட்ணுபுராணம்

☆ தானென்ற பூவை அவனடி சாத்தினால்
நானென்று அவனென்கை நல்லதொன் றன்றே.
- திருமூலர்

☆ நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே
மஞ்சனநீர், பூசை கொள்ள வாராய் பராபரமே.
- தாயுமானவர்

☆ அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா, - நன்புருகி
ஞானச் சுடர் விளக் கேற்றினேன் - நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான். -பூதத்தாழ்வார்

☆ கடவுளே, ஆற்றல் அனைத்தும் முடைய ஆண்டவனே, உன்னுடைய நட்பைப் பெற்றேன், ஒன்றுக்கும் அஞ்சேன்.
- இருக்வேதம்

☆ கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும்
குறித்திடுமோ ராபத்தில் வருந்துகின்ற போது,
படியிலதைப் பார்த்துக வேலைவர் வருத்துந் துன்பம்
பயந்தீர்த்து விடுகவெனப் பரிந்துரைத்த குருவே.

- இராமலிங்க சுவாமிகள்

☆ வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப்பணி கொண்டாய்.
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரி சொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.
வேண்டும் வேண்டும் மெய்யடியா ருள்ளே
விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே, அருமா மணிமுத்தே

தூண்டா விளக்கின் சுடரனையாய்
    தொண்டனேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
    மிக்க அன்பே மேவுதலே. - மாணிக்கவாசகர்

☆ மனமெனும் தோணி பற்றி
    மதியெனும் கோலை யூன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
    செறிகடல் ஓடும் போது
மதமெனும் பாறை தாக்கி
    மறியும்போ தறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய்
    ஒற்றியூர் உடைய கோவே. -திருநாவுக்கரசர்

☆ எவ்வுயிரும் என்னுயிர்பேல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.
தாயுமானவர்
அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.
தாயுமானவர்
எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.
தாயுமானவர்
தம்முயிர்போல் எவ்வுயிருந்
தானென்றுதண்ணருள்கூர்
செம்மையருக்கு ஏவல் என்று செய்வேன் பராபரமே.
-தாயுமானவர்

☆ கடவுளே, என்னைப் பொய்யிலிருந்து மெய்க்கு அழைத்துச் செல்லும்; இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும்; மரணத்திலிருந்து அமரத்துவத்துக்கு அழைத்துச் செல்லும். கி

☆ அருள் வள்ளலே, உம்மை அடைய அருளும், என்னகத்தே எழுந்தருளும், அப்பொழுது நான் தூய்மை பெறுவேன். -உபநிடதம்

☆ அழியாத பரம் பொருளே! நீரே எல்லோர்க்கும் நண்பர். உம்முடைய அடியார்க்கு உம்மைத் தவிர வேறு புகலிடமில்லை. -பாகவதம்

☆ வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை, மற்றது
வேண்டாமை வேண்ட வரும். -வள்ளுவர்

☆ எத்தனைச் சடங்குகளையும் ஆராதனைகளையும் எவ்வளவு ஒழுங்காகச் செய்தாலும் இதயத்தில் உண்மை இல்லையாயின் எள்ளளவும் பயன் தரா. இறைவனை ஏமாற்றுவதே யாகும். சி

☆ கடவுளிடம் கூப்பாடு போடவும் வேண்டாம், கைகளைத் தட்டவும் வேண்டாம், மிகச் சிறிய ஒலியும் அவர்க்குக் கேட்கும். சி

☆ அருட்கடலாகிய அஹுரமஜ்தா, என்னுடைய மனம் மொழி மெய் ஆகியவற்றின் தூய்மையை உமக்கு அர்ப்பணம் செய்கிறேன். அறத்தையே புகழ்கின்றேன். என் உடலை உம் உடலாக எண்ணுகின்றேன். ஜா

☆ அஹுர மஜ்தாவுக்குச் செய்யும் வழிபாடு யாது? அறவோர்க்கு ஊழியம் செய்வதே. அறவோரே அஹுர மஜ்தாவின் அவதாரமாவர். ஜா

☆ சிந்தையாலும் செயலாலும் தீமையை எதிர்க்கவும், மக்களுக்கு நன்மையைக் காட்டவும் செய்வதே ஓ, அஹுர மஜ்தா, உமக்குச் செய்வதற்குரிய வழிபாடு என்பதை உணர்ந்தேன். ஜா

☆ தீமை செய்ததற்கு வருந்தும் இதயமே இறைவனுக்கு அளிக்கும் பலியாகும். சுழிவிரக்கம் கொள்ளும் இதயத்தைக் கடவுள் வெறுக்கமாட்டார். எ

☆ சிறிதேனும் வழுவாமல் செய்துவரும் அறமே ஆண்டவனுக்குப் பிரியமான நற்செயலாகும். இ

☆ மீன்போல் நீரில் மூழ்குவதால் கடவுளை அடைய இயலுமோ? த்வளைபோல் இரவு பகலாகக் கத்துவதால் இறைவனைக் காண முடியுமோ?

☆ வீட்டிலேயே, குடும்பத்திலேயே இருந்துகொண்டே கடவுளிடத்தில் ஆழ்ந்துபோக முடியும்.

## வறுமை

☆ கிழிந்த உடை வறுமையைக் குறிக்குமே யன்றி மன வேதனையைக் குறிக்காது. தா

☆ எல்லோரும் இறப்பது சகஜம், அறிஞர் வறுமையுறுவது சகஜம். தா

☆ வயிற்றின் கொடுமை தாங்காமல்.வஞ்சகம் செய்வோர் பலர். ஆம் வயிறு என்று ஒன்று இல்லாவிட்டால் எவர் வறிஞர்? எவர் செல்வர்? கி

## வாய்மை

☆ கடவுள் உண்மையானவற்றைக் காப்பார், பொய்யானவற்றை அழிப்பார். உலகத்தைத் தாங்கி நிற்கும் அடிநிலை உண்மையே. உண்மை உரைப்பவனுடைய உயிராற்றல் பெருகும், நாளுக்கு நாள் அவன் நல்லவனாவான். -
இருக்வேதம்

☆ கடவுளே உண்மை, கடவுளை அறிவதே மனிதனுக்கு நன்மை தருவதாகும்.

☆ உலகத்தில் வெற்றி பெறுவது உண்மையே, பொய் யன்று. உபநிடதம்

☆ உண்மையை விட்டு விலகாதவனே உண்மையான கடவுள் பக்தன் என்று உணர்வாய். -மகாபாரதம்

☆ உண்மையினும் உயர்ந்த பொருளில்லை, உண்மை யே அனைத்திலும் புனிதமானது. -வால்மீகி

☆ யாமெய்யாக் கண்டவற்று ளில்லை, எனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. திருவள்ளுவர்

☆ வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். திருவள்ளுவர்

☆ தன்னெஞ் சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். திருவள்ளுவர்

☆ உண்மை என்னும் விளக்கை உறுதியாகப் பிடித்துக் கொள். பௌ

☆ எவனிடம் உண்மை, ஒழுக்கம், தூய்மை உண்டோ, அவனே சான்றோன். பௌ

☆ பொய்யின் நீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்டு
ஐயமின்றி அறநெறி ஆற்றுமின்
வைகல் வேதனை வந்துறல் ஒன்றின்றிக்
கௌவையில் உலகு எய்துதல் கண்டதே.

*ச-வளையாபதி*

☆ உண்மையைக் காண்பவன் அதில் தவிர வேறு எதிலும் இன்பம் காணமாட்டான். உண்மையில் மட்டும் இன் பம் காண்பவன் வேறு எதையும் பொருட்படுத்த மாட்டான். *ச*

☆ உண்மையைக் காண முயல், உண்மையைக் கண்டு அதற்குத் தக நில். ச

☆ பொய் பேசற்க. பிறரைப் பொய் பேசச் செய்யற்க. பிறர் பொய் பேச ஏற்றுக்கொள்ளற்க. ச

## வாழ்வு

☆ வாழ்வதெல்லாம் மக்களுக்கு நன்மையும் இன்பமும் தேடுவதற்கே. பௌ

☆ இறந்தும் இறவாமல் இருப்பவன் நீண்ட நாள் வாழ்பவன். தா

☆ தன்னுடைய வாழ்வுக்காக எதுவும் செய்யாதவனே வாழ்வின் பயனை அறிந்தவன். தா

☆ நாம் செய்யும் செயல்களுக்கேற்ற வண்ணமே வாழ்வும் தாழ்வும் உண்டாகும். தா

## விமோசனம்

☆ வாழ்வைக் காக்க விரும்புவோர் இழக்கவேண்டும். என் பொருட்டு வாழ்வை இழப்போர் வாழ்வைப் பாதுகாப்பவர். உலகம் முழுவதையும் பெற்றும் ஆன்மாவை இழந்துவிட்டால் யாது பயன்? கி

## வீரன்

☆ பகைவனை நண்பனாகச் செய்துகொள்ள வல்லவனே வீரன். எ

## வெற்றி

☆ நீரைப்போல் மென்மையுடையது வேறு கிடையாது. ஆயினும் அதுவே கடினமானவற்றைக் கரைத்து விடும். அதுபோல் மெலியார் வலியாரை வெல்வர். இதை எல்லோரும் அறிவர், ஆயினும் யாரும் பயில்வதில்லை. தா

☆ உன்னைத் திருத்திக்கொள். அதன் பின்னரே பிறரைத் திருத்தத்குரிய ஆற்றலைப் பெறுவாய். தா

☆ சிறந்த வீரர் போர்க்குணமில்லாதவர். அவர்கள் சினத்தைத் துறந்தவர். போர் செய்யாது பகைவரை வெல்பவரே தலைசிறந்த வெற்றி பெறுபவர். தா

## வேண்டுதல்

☆ எவருடைய பிரார்த்தனை கடவுளர்க்கு இனியது? பிறர்க்கு ஈவோர், இன்சொல் கூறுவோர், அறநெறி நிற்போர் இவருடையதே. ஜா

☆ ஆண்டவனே! நான் உம்மிடம் வேண்டுவது இதுவே. உண்மையை எனக்கு உரைத்தருளும். ஜா

☆ அண்ணலே! அறநெறி நிற்பதற்கான நல்லெண்ணங்களை எண்ணும் ஆற்றலை அருள்வீர். அறத்தின் மூலம் உம்முடன் ஐக்கியமாகும் பேற்றை அருள்வீர். ஜா

☆ ஆண்டவனே, உம்மைப் பணிந்து வேண்டுகின்றேன். தோன்றாத் துணையாக நிற்கும் அண்ணலே, அறநெறியில் நிற்கும் அறிவை எனக்கு அருளும். எல்லோருக்கும் இன்பம் தரும் மார்க்கத்தைக் காட்டும். ஜா

☆ ஓ அஹுரர், நான் வேண்டுவது இதுவே. எல்லா மக்களுக்கும் ஏற்றமுடைய மதத்தை எனக்கு அருளும். உம்மை நாடும் அறிவுடைய ஆசையைத் தருவதும் உண்மையை ஆதாரமாகவுடையதும், நடுவு நிலைமை தவறாததுமான மதத்தை எனக்குக் காட்டி அருளும்.ஜா

☆ கடவுளே, எனக்குத் தூயதான இதயத்தை அருளும் என்னிடம் அறம் விரும்பும் ஆன்மாவை அமைத்தருளும். எ

☆ பிறர்க்காகப் பிரார்த்தனை செய்பவனுடைய பிரார்த்தனையே கேட்கப்படும். எ

☆ பிரார்த்தனை மண்டபத்தின் வாயில் சில சமயம் திறந்திருக்கும், சில சமயம் மூடியிருக்கும், ஆனால் கழிவிரக்கத்தின் வாயில் எப்பொழுதும் திறந்தேயிருக்கும். எ

☆ பிரார்த்தனை என்பது இதயம் செய்யும் வழிபாடாகும். எ

☆ கடவுளே, என்னைச் சோதியும், என் இதயத்தைத் துருவும், என் எண்ணங்களை அறியும், என்னை அறநெறியில் இட்டுச் செல்லும். எ

☆ கடவுளே, கையால் வேலை செய்து இன்பம் தேடுவதே உம்முடைய அருட் பிரசாதம். எ

☆ ஓதியே சுருதி தினந்தினம் படித்தும்
உணர்விலாது உலகொழுக்கு உவந்து
தீதிலே பயின்று செந்நெறி யிகந்த
தீயனேன் உய்யுமா றறியேன்
கோதிலா நீதிக் கொழுங்கதிர்ப் பிழம்பே
குணிப்பருங் கருணை வாரிதியே
ஆதியே அடியேன் நின்சரணடைந்தேன்
அஞ்சல் என்று அடைக்கலம் அருளே.

கி -கிருஷ்ணப்பிள்ளை

☆ செபஞ் செய்யுங்கள், கவனமாயிருங்கள், ஆசை வயப்படாமல் காத்துக்கொள்ளுங்கள், ஆன்மா அறத்தில் நிற்க விரும்பினும் உடல் ஆற்றலற்றது ஆகலின்.கி

☆ கடவுளே, உலக நாயகனே போற்றி, கருணாமூர்த்தியே போற்றி, இறுதி நாளில் தீர்ப்பளிக்கும் இறைவனே போற்றி, உன்னையே வணங்குவோம், உன்னையே

உதவி அருள அழைப்போம், நேரான வழியைக் காட்டும், உம்முடைய அடியார்கள் சென்ற அற நெறியைக் காட்டும். இ

☆ நான் மனிதனுக்கு நன்மை செய்யும்போது என்னிடம் வருவதில்லை. தீமை வந்தால் அப்போது நீண்ட நேரம் பிரார்த்தனை செய்கிறான். இ

☆ மனவுறுதியுடன் பிரார்த்தனை செய், பிரார்த்தனை செய்பவர் பிழை செய்யலாகாது. இ

☆ அல்லாவே, உடல்நலத்தையும், பத்தினி தர்ம விரதத்தையும், உன்னிடம் நம்பிக்கையையும், நற் குணத்தையும், உன் கட்டளைப்படி நடக்கும் இயல் பையும் எனக்கு அருளும். இ

## வேதம்

☆ வேதத்தை விட்ட அறமில்லை, வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள, தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே.-திருமூலர்

## வேதாந்தம்

☆ வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்,
வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே.-திருமூலர்

★ ★ ★

குறிப்பு :

# சர்வ சமயச் சிந்தனைகள்



புலவர் த. கோவேந்தன்